## நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தல் - 2024

### அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கை

# முன்னுரை

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவருடைய லட்சியப் பாதையில் தடம் மாறாது பயணித்து, அவரை தனது வாழ்நாள் முழுவதும் அரசியல் ஆசானாகக் கொண்டு, கொடியில், கொள்கையில் அவரது முத்திரையைப் பதித்து, கழகத்தை அவரது பெயரால் உருவாக்கியவர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற ஏழை, எளிய மக்களின் நாடி நரம்புகளில், ஊனில், உணர்வில், உதிரத்தில், கலந்துள்ளவர் 'பொன்மனச் செம்மல்' புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அடித்தட்டு மக்களின் வாழ்வு உயரவும், எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்; சமத்துவமும், சமஉரிமையும் பெண்களும் பெற வேண்டும்; என்ற உயரிய கொள்கைகளை அடிநாதமாக கொண்டு சம உரிமை நிலைத்திடவும், சமூகத்தில் நல்லிணக்கம் காத்திடவும், மதச்சார்பின்மையும், சமூக நீதியும் நிலைத்து நீடிக்கச் செய்திடவும், தனது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து உழைத்தவர்; உழைப்பவரே உயர்ந்தவர் என்ற பொன்மொழியை இந்த உலகுக்கு தந்திட்டவர்தான் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், இத்தகைய உயர்ந்த லட்சியங்களால், கொள்கை, கோட்பாடு போன்ற உறுதிகளால் நிலைத்து நீடித்து இருக்க வலுவான அடித்தளம் அமைத்துத் தந்தவர் நமது 'பொன்மனச் செம்மல்' புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வகுத்துத் தந்திட்ட வரலாற்றுப் பாதையில், தனது அரசியல் பயணத்தை வீரத்தோடும், விவேகத்தோடும், பேராற்றலோடும் எதிர்கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றை எழுதியவர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தன் வாழ்நாள் முழுவதையும், **"மக்களால் நான், மக்களுக்காகவே நான்"** என்கிற தாரக மந்திரத்திற்கு ஏற்ப தாளாது பணியாற்றிய தலைதாழாச் சிங்கம், தன்மானத்தின் தங்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஆட்சியையும் பீடுநடை போட வைத்து **"வடக்கை வென்ற தெற்கு"** என்கிற வரலாற்றைப் படைத்தவர் தான், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.,** புரட்சித் தலைவி **அம்மா** ஆகிய இருபெரும் தலைவர்களின் வழியில் செயல்பட்டு வரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அவர்கள் அமைத்துத் தந்த கழக அரசும், இன உணர்வோடு தமிழ் மொழி காத்து, தமிழினத்தின் மாண்பையும், மரபையும் போற்றி, **'தமிழர் உரிமை மீட்போம், தமிழ் நாடு காப்போம்'** என்கிற கொள்கை பிரகடனத்தோடு நடைபெற இருக்கின்ற 2024, நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலில், 'புரட்சித் தமிழர்' மாண்புமிகு **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் மக்களைச் சந்தித்து சரித்திரம் படைக்க தேர்தல் களம் காண உள்ளது. **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'** என்கிற நெறிப்படி, சமூக நீதிக் கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கையோடு பயணித்து **'எம்மதமும் சம்மதம், எம்மதமும் என் மதம்'** என்கிற கொள்கையோடும், சாதி, மத, இன பேதங்களைக் கடந்து **"அமைதி, வளம், வளர்ச்சி"** என்ற புரட்சித் தலைவியின் தாரக மந்திரத்தை தனது கொள்கை பிரகடனமாகக் கொண்டு தமிழ் சமுதாய நலன், தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் 'புரட்சித் தமிழர்' **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் பீடுநடை போட்டு **'தமிழர் உரிமை மீட்போம், தமிழ் நாடு காப்போம்'** என்ற புரட்சியைப் படைக்க புதிய வரலாறாய் வருகிறது.

**19.04.2024** அன்று நடைபெற இருக்கும் நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலில், தமிழகம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட **40** நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றிச் சரித்திரம் படைத்து, இந்திய நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் உரிமைகளுக்காக குரல் எழுப்பி, தமிழகத்தை மேலும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்று, மத்திய, மாநில அரசுகளின் உறவு குறித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொன்மொழிக்கு ஏற்ப, **'கட்டுண்டு வாழ்வோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம்'!** என்கிற வெற்றிப் பிரகடனத்தோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியேற்று, மக்கள் பணியில் தளராது பயணிக்க, பின்வரும் வாக்குறுதிகளை மக்களுக்கு பெருமகிழ்ச்சியோடு சமர்ப்பிக்கிறது.

கழகப் பொதுச் செயலாளர் 'புரட்சித் தமிழர்' **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களால் அறிவிக்கப்பட்ட **"தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர்"** தமிழ் நாடு முழுவதும் **9** மண்டலங்களுக்கு நேரில் சென்று, பல்வேறு தரப்பட்ட மக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களைப் பெற்று அவற்றை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது தான் இந்தத் தேர்தல் அறிக்கை.

1. **ஆளுநர் பதவி – நியமன முறை – கருத்து கேட்க வேண்டும்:**

மாநிலங்களை பொறுத்தவரை ஆளுநர் பதவி என்பது ஓர் அலங்காரப் பதவி என்றாலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அப்பதவி இடம் பெற்றிருக்கிறவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தததைப் போல, **“மத்திய அரசு, ஆளுநரை மாநிலங்களுக்கு நியமனம் செய்யும் போது சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்களுடன் ஆலோசித்து, முதலமைச்சரின் ஒப்புதலோடுதான் நியமனம் செய்யப்பட வேண்டும்’’** என்பதை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி, மத்திய அரசு நடைமுறைப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

2. **உச்சநீதிமன்ற கிளையை சென்னையில் அமைக்க மத்திய அரசை வலியுறுத்தல் :**

தென் மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் நீதி கேட்டு நெடுந்தொலைவு செல்லும் நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு, உச்சநீதிமன்றக் கிளையை பழமையும் பெருமையும் வாய்ந்த உயர்நீதிமன்றம் செயல்பட்டுவரும் சென்னையில் அமைக்க வேண்டியதன் அவசியத்தை, உச்சநீதிமன்ற கொலீஜியம் மற்றும் மத்திய அரசிடம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

3. **நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தை சென்னையில் நடத்த வலியுறுத்தல் :**

மத்திய–மாநில அரசுகளின் உறவு வலுப்படவும், கூட்டாட்சி முறைக்கு வித்திட்டதாக அமையும் நோக்கிலும், ஆண்டுதோறும் டெல்லியில் நடைபெற்று வரும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தை, சென்னையில் நடத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

4. **குற்ற வழக்குச் சட்டங்களின் பெயர் மாற்றத்தைக் கைவிட வலியுறுத்தல் :**

சமீபத்தில் மத்திய அரசு, மூன்று குற்ற சட்டங்களான ஐபிசி, சிஆர்பிசி, எவிடன்ஸ் ஆக்ட் (I.P.C., Cr.P.C. Evidence Act) ஆகியவற்றுக்கு இதுவரை ஆங்கிலத்தில் இருந்து வந்த பெயர்களை இந்தியில் பெயர் மாற்றம் செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது. இத்தகைய பெயர் மாற்றம் இந்தி

மொழித் திணிப்பு நிறைந்த செயல் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. சட்டப் பிரிவுகள் ஆங்கிலத்தில் இருக்கும் போது சட்டங்களின் தலைப்புகள் மட்டும் இந்தியில் இடம் பெறுவது என்பது தமிழ் நாடு போன்ற பிற மொழி பேசும் மாநிலங்களுக்கு எதிரான மொழி திணிப்பாகும். எனவே, மீண்டும் மேற்படி சட்டங்களின் பெயர்கள் ஆங்கிலத்திலேயே தொடர, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

## 5. வழக்காடு மொழியாக தமிழ் இடம்பெற வேண்டும் :

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது. தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக தாய்மொழியாம் தமிழ் இருக்கும் நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ் மொழி இடம்பெற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

## 6. மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் :

i) மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பயனாளிகளுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் தின ஊதியம் ரூ. 450/– ஆக உயர்த்திக் கொடுக்கவும், நுகர்வோர் விலை விகித உயர்வுக்கு (consumer price index) ஏற்ப அவ்வப்போது உரிய அளவு உயர்த்தி வழங்கவும், வேலை நாட்களை 150 நாட்களாக அதிகரிக்கவும், மத்திய அரசை அத்திட்டத்திற்குப் போதுமான அளவு நிதியை ஒதுக்க வேண்டும் என்பதையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

ii) ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதாரமாக இருக்கும் இத்திட்டத்தின் பயனை விரிவுபடுத்தி, பேரூராட்சிகளிலும் இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

## 7. மத்திய அரசின் திட்ட நிதி பகிர்வு :

i) மத்திய–மாநில அரசு திட்டங்களில் (centrally sponsored schemes) தற்போது நிதி பகிர்வு மத்திய, மாநில அரசுகளிடையே 60:40 என்ற விகிதத்தில் உள்ளது. இதனால், மாநில அரசுகளுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச் சுமையால், மாநில அரசுகள், அந்தந்த மாநிலங்களில் தனித் தன்மையோடு கூடிய மாநில அரசு திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. எனவே, இந்த பகிர்வு விகிதத்தை 75:25 சதவீதமாக மாற்றி அமைக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ii) மத்திய, மாநில அரசு திட்டங்களான, பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம், முதியோர் உதவித் தொகை, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் போன்ற திட்டங்களில் வழங்கப்படும் அளகு தொகை பல வருடங்களாக உயர்த்தப்படவில்லை. இவை, காலத்திற்கேற்ப விலை உயர்வைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது உயர்த்தி வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

iii) **மத்திய அரசு வழங்கும் தமிழ் நாட்டிற்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் :**

மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் இலவச எரிவாயு சிலிண்டர் இணைப்பு ஒதுக்கீடு மற்றும் பிரதம அமைச்சர் வீடு கட்டும் திட்ட ஒதுக்கீடு அளவு, தமிழ் நாட்டிற்கு குறைந்த அளவிலேயே தொடர்கிறது. அதாவது தமிழ் நாட்டின் மக்கள் தொகை, தேசிய மக்கள் தொகையில் **6.2**%–ஆக இருக்கும் நிலையில், மேற்படி திட்டங்களின் ஒதுக்கீடும் இதே அளவு இருக்க வேண்டும். ஆனால், மற்ற வடமாநிலங்களை ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவு ஒதுக்கீடு அதாவது **2** சதவீதமாகவே இருக்கிறது. எனவே, ஒதுக்கீட்டின் அளவை அதிகரித்து, அதிக பயனாளிகள் பயன்பெறும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்க, மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

iv) மத்திய அரசே முழுமையாக நிதி வழங்கும் திட்டங்களில் (central sector schemes) மாநிலங்களுக்கிடையே காட்டப்படும் பாரபட்சத்தைத் தவிர்த்து, அனைத்து மாநிலங்களுக்கும் சம நீதியோடு திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துவோம்.

## 8. இரயில் பயணச் சலுகை:

இரயில் பயணங்களில் மூத்த குடிமக்களுக்கு 50 சதவீத கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. அதே போல, அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் அளிக்கப்பட்டது. ஆனால், தற்போது அச்சலுகை நிறுத்தப்பட்டுவிட்டது. நிறுத்தப்பட்ட இரயில் பயணக் கட்டணச் சலுகையை மீண்டும் வழங்கிட மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

## 9. மேகதாட்டு அணை :

காவிரி நதிநீர் பிரச்சனையில் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பையும், உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பையும் தமிழ் நாடு ஏற்கெனவே பெற்றிருக்கும் நிலையில், கர்நாடக அரசு தொடர்ந்து அந்தத் தீர்ப்புகளை மதிக்காமல் சட்டப்படியான தமிழ் நாட்டுக்கு வழங்க வேண்டிய நீரைத் தர மறுத்து வருகிறது. மத்திய அரசும் அரசியல் காரணங்களுக்காக இந்த விவகாரத்தில் மௌனம் சாதிக்கிறது. இந்த நிலையில், பிடிவாதமாக காவிரியின் குறுக்கே மேகதாட்டுவில் அணை கட்டப்போவதாக நிதி ஒதுக்கீடு செய்து மத்திய நீர் வள கமிஷனை நாடியிருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும் திமுக அரசு அதைக் கண்டுகொள்ளாமல், தடுக்க எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை. மத்திய அரசை வலியுறுத்தி கர்நாடக அரசின் செயல்பாட்டை முடக்க முன்வரவில்லை. இப்பிரச்சனையில் தொடர்ந்து சட்ட ரீதியாக நியாயத்தை நிலைநாட்டி, தமிழ் நாட்டின் உரிமையை நிலைநாட்டிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, மேகதாட்டு அணை கட்டும் திட்டத்தை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தும்.

**10. முல்லைப் பெரியாறு அணை பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் :**

மாண்புமிகு அம்மாவின் அரசு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த உச்சநீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றது. ஆனாலும், அதற்கு எந்தெந்த வகையில் இடையூறு செய்ய முடியுமோ, அவ்வளவு இடையூறுகளையும் கேரள அரசு செய்து வருவதோடு, தமிழ் நாட்டில் உள்ள ஐந்தாறு மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகும் வகையில் மேலும் ஓர் அணை கட்டி தமிழ் நாட்டுக்கு தண்ணீர் கிடைப்பதை தடுக்க காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கிறது. முல்லைப் பெரியாறு அணை பலமிழந்து இருப்பதாகவும், அதனால்தான் வெள்ளப் பெருக்கை கருத்தில் கொண்டு அணை கட்டுவது தவிர்க்க முடியாதது என்றும் வாதாடுகின்றனர். புதிய அணை கட்டுவதன் பாதிப்பை உணர்ந்துள்ள காரணத்தால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட ரீதியாக எதிர்கொள்ளவும், அதனை மத்திய அரசிடம் வலியுறுத்தி கேரள அரசின் முடிவை முறியடிக்கவும் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளும்.

**11. பாலாற்றில் தடுப்பணை கட்டும் முயற்சிக்கு எதிர்ப்பு :**

பாலாற்றின் குறுக்கே கூடுதலாக ஒரு தடுப்பணை கட்ட ஆந்திர அரசு நடவடிக்கை எடுத்து வருவதைத் தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தடுத்து வருகிறது. மீண்டும் ஆந்திர அரசு எடுத்து வரும் நடவடிக்கையைத் தடுக்கும் வகையில் தமிழ் நாட்டுக்கு வந்து சேரும் நீர்வரத்தை கெடுக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதை மத்திய அரசின் மூலமாக தடுத்து நிறுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்.

**12. காவிரி – குண்டாறு – வைகை இணைப்புத் திட்டம்:**

காவிரி – குண்டாறு – வைகை இணைப்புத் திட்டத்தினை மாண்புமிகு எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு நிதி ஒதுக்கீடு செய்து, பணிகளையும் துவங்கிய நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அத்திட்டம் திமுக அரசால் கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

உயிர்நாடியான அத்திட்டத்தை தமிழ் நாட்டின் தென் மாவட்ட மக்களின் நலன் கருதி தொடர்ந்து நிறைவேற்றிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

13. **கோதாவரி – காவிரி இணைப்புத் திட்டம் :**

விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்கு அண்டை மாநிலத்தை நம்பியிருக்கும் தமிழக மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைத்திட கோதாவரி–காவிரி இணைப்புத் திட்டம் முழுமையாக பயன்பெறும் வகையில், உடனடியாக செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதோடு, குறிப்பிட்ட குறைந்தபட்ச கால அவகாசத்தில் திட்டத்தை நிறைவேற்றிட மத்திய அரசை வலியுறுத்தி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தும்.

14. **நடந்தாய் வாழி காவேரி திட்டம் :**

நடந்தாய் வாழி காவேரி திட்டம் மாண்புமிகு எடப்பாடியார் ஆட்சியில் திட்டமிடப்பட்டு விரிவான திட்ட அறிக்கையும் தயார் செய்யப்பட்டு மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உறையில் வாசிக்கப்பட்டது. “நடந்தாய் வாழி காவேரி திட்டம்” திமுக ஆட்சியில் முடக்கப்பட்டுவிட்டது. கங்கை நதியை தூய்மைப்படுத்த மத்திய அரசு தாராளமாக நிதியை உத்திரப் பிரதேச அரசுக்கு வழங்கி வருவதைப் போல, நடந்தாய் வாழி காவேரி திட்டத்திற்கு புத்துயிர் கொடுக்கும் வகையில், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும். இதேபோல், வைகை நதி மீட்பு, தாமிரபரணி நதி மீட்பு போன்ற திட்டங்களுக்கும் மத்திய நிதி வழங்க வலியுறுத்துவோம்.

15. **கால்வாய்களில் கான்கிரீட் திட்டம் :**

டெல்டா மாவட்டங்களில் உள்ள விளை நிலங்களுக்கு, மேட்டூர் அணையில் இருந்து சாகுபடிக்கு ஆண்டுதோறும் திறந்துவிடப்படும் தண்ணீரானது கடைமடைப் பகுதிகளுக்கும் சென்று சேரும் வகையில் ஆண்டுதோறும் தூர்வாரும் பணிகளைச் செய்வதால் தொடர்ந்து ஏற்பட்டுவரும் நிதிச்

செலவைக் குறைக்க நிரந்தரமாக கால்வாய்களில் கான்கீரிட் தளமாக மாற்ற ஆகும் சிறப்புத் திட்டச் செலவை மத்திய அரசே மேற்கொள்ள வேண்டும் என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**16. பாண்டியாறு – புன்னம்புழா திட்டம் :**

கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களின் விவசாய மேம்பாட்டிற்காக பரம்பிக்குளம்–ஆழியாறு மற்றும் பாண்டியாறு–புன்னம்புழா ஆகிய இரண்டு திட்டங்களை விரைந்து செயல்படுத்திட மத்திய அரசையும், மத்திய அரசின் மூலம் கேரள அரசையும் வலியுறுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**17. சிறுவாணி அணையை தூர்வாரி சீரமைக்கும் திட்டம் :**

கோவை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் சிறுவாணி அணையை தூர்வாரி சீரமைக்கும் திட்டத்தை துரிதமாய் செயல்படுத்த மத்திய அரசையும், மத்திய அரசின் மூலம் கேரள அரசையும் வலியுறுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**18. மருத்துவப் படிப்புக்கான நீட்டுக்கு (NEET) மாற்றுத் தேர்வு முறை :**

மாநில அரசுகள் பல்வேறு பாடத் திட்டங்களை பின்பற்றி வருவதால் மருத்துவப் படிப்புக்கு மத்திய அரசால் நடத்தப்படும் நீட் (NEET) பாரபட்சமாக இருப்பதாலும், தமிழக வரலாற்று நிகழ்வுகளைவிட வடமாநில வரலாற்று நிகழ்வுகளே அதிகம் இடம்பெற்றிருப்பதாலும், இந்தித் திணிப்பை உள்ளடக்கி இருப்பதாலும், அதற்கு எதிர்ப்பு தொடர்ந்து இருந்து வரும் நிலையில், அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கும் வகையில் நீட்டுக்கு மாற்றாக +2 தேர்வு மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர் / மாணவியர் சேர்க்கை முறையில் மாற்றத்தைக் கொண்டுவர மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**19. மழைநீர் சேகரிப்பு திட்டம் :**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டமான, விவசாயம் மற்றும் குடிநீர் பிரச்சனைகளை நிரந்தரமாக தீர்க்கக்கூடிய மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை, தேசிய அளவில்

ஓர் இயக்கமாகவே செயல்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், பாதுகாக்கவும் தேவையான செயல் திட்டத்தை வகுத்து செயல்படுத்தவும், மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

## 20. குடிமராமத்து திட்டம் :

மாண்புமிகு **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் ஆட்சிக் காலத்தில் அவருடைய சீரிய முயற்சியால் தொடங்கப்பட்ட குடிமராமத்து திட்டம் தமிழ் நாட்டு விவசாயிகளின் வரவேற்பைப் பெரிதும் பெற்றது. இந்த திட்டத்தின் வாயிலாக நீர்நிலைகள் தூர் வாரப்பட்டு எடுக்கப்பட்ட வண்டல் மண் விளை நிலங்களுக்கு உரமாக பயன்படுத்தப்பட்டது. அணைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் தேவையான அளவுக்கு மழைநீர் தேக்கப்பட்டது. அதனால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. பாசனத்திற்கும் தேவையான நீர் கிடைக்கப் பெற்றது. விவசாயப் பெருமக்களின் வரவேற்பைப் பெற்ற இத்திட்டத்திற்கு, மாநில அரசுக்கு மத்திய அரசு சிறப்பு நிதியுதவி செய்யவும், இத்திட்டத்தை தேசிய திட்டமாக மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடு முழுவதும் இத்திட்டத்தை செயல்படுத்தவும் மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

## 21. கச்சத் தீவு மீட்பு :

திமுக ஆட்சி காலத்தில், மத்திய காங்கிரஸ்–திமுக ஆட்சியாளர்களால் இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்ட, தமிழ் நாட்டுக்குச் சொந்தமான கச்சத் தீவை மீட்டெடுத்து தமிழ் நாட்டின் உரிமையை நிலை நாட்டவும், மத்திய அரசு இதில் தலையிட்டு சட்டரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவும்; மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உச்சநீதிமன்றத்தில் கச்சத் தீவை மீட்க தொடரப்பட்ட, நிலுவையில் உள்ள வழக்கை விரைவுபடுத்தவும், மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**22. தமிழக மீனவர்களுக்கான பாதுகாப்பு :**

மன்னார் வளைகுடா பகுதியில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினராலும், சிங்கள கடல் கொள்ளையினராலும் தாக்கப்படுவதை தடுக்கவும், அவர்களின் உயிர் மற்றும் உடமைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும், தென் பிராந்தியத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் உள்ளடங்கிய கடற்படை பாதுகாப்பை (Navel Security) வலுப்படுத்த வேண்டும். இது குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

**23. இதர பிற்பட்ட வகுப்பினரில் மேல் நிலையினர் எனப்படும் கிரிமிலேயர் வருமான வரம்பை உயர்த்த வலியுறுத்துதல் :**

இதர பிற்பட்ட வகுப்பினரில் மேல் நிலையினர் எனப்படும் (OBC) கிரிமிலேயர் வருமான வரம்பு மத்திய அரசால் ரூ. 8 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த உச்ச வரம்பை ரூ. 12 லட்சமாக உயர்த்த மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**24. உயிர் காக்கும் மருந்துகளின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை :**

உயிர் காக்கும் மருந்துகளின் விலை ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு எட்டாக்கனியாக இருந்து வருகிறது. மருந்து தயாரிக்கும் நிறுவனங்களோடு கலந்து பேசி மக்களை பாதிக்காத வகையில், உயிர் காக்கும் மருந்துகளின் விலை நிர்ணயத்தை, அம்மா மருந்தகம், பிரதம மந்திரி மலிவு விலை மருந்தகம் ஆகியவற்றில் விலை நிர்ணயிக்கப்படுவது போல, விலை நிர்ணயத்தை கடுமையாக கடைபிடிக்கும் வகையில் விதிமுறைகளை வகுத்து, குறைந்த விலையில் மருந்துகள் எளிதாக கிடைக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**25. இருசக்கர வாகனங்களுக்கென்று தனி பாதை அமைத்தல் :**

தேசிய நெடுஞ்சாலை (NH) மற்றும் மாநில நெடுஞ்சாலை (State Highway) துறைகளின் வாயிலாக போடப்படும் 2, 4, 6 வழிச் சாலைகளின் இடதுபுறம் ஓரமாக இருசக்கர வாகனங்கள் செல்வதற்கென்றே தனி பாதை (Lane)

அமைப்பதன் மூலம் சாலை விபத்துக்களும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் தவிர்க்கப்படும் என்பதைக் கணக்கில்கொண்டு, சாலைகள் அமைக்கத் திட்டமிடும்போதே அதற்கென்று தனி பாதை அமைக்கும் வகையில், நெடுஞ்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறைகளுக்கு உத்தரவிட மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்தும்.

**26. மருத்துவ பணியாளர்களுக்கு தனி வாரியம் :**

தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றிவரும் மருத்துவப் பணியாளர்களுக்கென பிரத்யேகமாக பணி பாதுகாப்பு வழங்கும் வகையில், தனி வாரியம் அமைக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**27. சாயப் பட்டறை கழிவுநீர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு :**

ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு தற்போது இருந்துவரும் சாயப் பட்டறை கழிவுநீர் பிரச்சனைகள் தீர்க்கப்படவும், அதற்கு நிரந்தரத் தீர்வு காணவும், அதற்குத் தேவையான அனைத்து இடங்களிலும் ''ஹைடெக் சுத்திகரிப்பு'' நிலையங்களை போதிய நிதி ஒதுக்கி அமைத்திடவும், தேசிய அளவில் செயல்திட்டம் ஒன்றை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்த மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**28. வக்ஃப் வாரியம் பாதுகாக்கப்படும் :**

இஸ்லாமிய சமூதாயத்தின் பாரம்பரிய சொத்துக்களை பாதுகாப்பதற்கென்று உருவாக்கப்பட்ட வக்ஃப் வாரியத்தை கலைக்கும் அல்லது கையகப்படுத்தும் நோக்கத்தில் மத சார்புள்ள கட்சிகள் செயல்பட்டால் அவற்றை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாக எதிர்த்து, இஸ்லாமிய சமுதாயத்தின் நியாயமான கோரிக்கையின் பக்கம் அரணாக நிற்கும்.

**29. வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காத்திட நலவாரியம் அமைத்திட முயல்வோம்:**

உலக நாடுகள் பலவற்றில் தமிழர்கள் வேலை மற்றும் தொழில் நிமித்தமாக அங்கேயே குடியேறி, அந்நாட்டின் குடியுரிமை பெற்றும், பெறாமலும் வாழ்ந்து வருகிறார்கள். அந்நாடுகளின் சூழலுக்கேற்ப அவர்களுக்கு அவ்வப்போது பாதுகாப்பற்ற சூழ்நிலையும் ஏற்படுகிறது. அந்நாடுகளில் வசிக்கும் அவர்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு சொந்த நாடும் உதவிக்கரம் நீட்ட வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பும், உதவிகளும் கிடைக்க உத்தரவாதம் அளிக்கும் வகையில் மத்திய அரசால் நலவாரியம் அமைக்கப்பட்டு, குடியேறிய நாட்டின் ஒத்துழைப்போடு, செயல்பட்டு வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு பாதுகாப்பு கவசமாக திகழ்ந்து, எல்லா வகையிலும் உதவிட வெளிநாடுவாழ் தமிழர்கள் நலச் சங்கம் ஒன்றை மத்திய அரசு அமைத்திட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**30. வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்று, ஆபத்தான சூழலில் உள்ள தமிழர்களை மீட்க நடவடிக்கை :**

i) தமிழ் நாட்டில் இருந்து தனியார் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலம், எந்தவித பாதுகாப்புமின்றி வெளிநாடு சென்று பணிபுரியும் தமிழர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வேலையிழந்து சொந்த நாடு திரும்ப வழியில்லாமல் தவிக்கும் நிலை இருந்து வருகிறது. வாழும் நாட்டில், போர், பேரிடர் போன்ற காரணங்களால் அல்லல் படும் நிலையும் அவ்வப்போது ஏற்படுகிறது. அது போன்ற நிகழ்வுகளில் மத்திய அரசும், மாநில அரசும் அந்நாடுகளின் இந்தியத் தூதரகம் வாயிலாக தாமதமின்றி அவர்களை மீட்பதற்கும், சொந்த நாட்டிற்கு பாதுகாப்பாக அழைத்துவரவும் ஆவண செய்ய, செயல் திட்டத்தை வகுக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

ii) அதேபோல், வெளிநாடு சென்று வேலை செய்யும் அனைவருக்கும் உயிர் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பிற்கான காப்பீட்டுத் திட்டத்தை வகுத்து செயல்படுத்த மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**31. பழங்குடியினருக்கு சாலை வசதி – கல்வி வசதி :**

i) பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளிலும், வனப்பகுதிகளிலும் போதிய சாலை வசதியின்றி ஆண்டாண்டு காலமாக, உலகத்தோடு தொடர்பு இல்லாத நிலையில் வாழ்ந்து வரும் பழங்குடியினர் குடியிருப்புகளை இணைக்கும் வகையில், போதிய நிதி ஒதுக்கி, தேவையான இடங்களில் தரமான சாலை வசதி செய்துதர, வனத் துறை விதிக்கும் தடைகளுக்கு ஒரு பொதுவான விதிவிலக்கு வழங்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசை வலியுறுத்தும்.

ii) பழங்குடியின குழந்தைகள் கல்வி அறிவு பெற்றிட அவர்கள் குடியிருக்கும் பகுதிகளிலேயே உண்டு உறைவிடப் பள்ளியான **“ஏகலைவா’’** பள்ளிகளை போதிய நிதி ஒதுக்கி, தேவையான கூடுதல் இடங்களில் அமைக்க மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**32. சிறு, குறு நடுத்தர தொழில் மேம்பாடு :**

i) நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு ஒரு காரணியாக இருக்கும் சிறு, குறு, நடுத்தர தொழில்கள், மிகுந்த நெருக்கடி நிலையிலும், முடங்கும் நிலையிலும் இருந்து வருகிறது. அத்தொழில்களுக்கு புத்துணர்வு அளிக்கும் வகையில், அந்நிறுவனங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தும் மின்சாரத்திற்கு மானியம் வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம். அதே சமயம் அத்தொழில்களை சிரமமின்றி நடத்தவும், விரிவுபடுத்தவும் தேசிய வங்கிகள் மூலமாக குறைந்த வட்டியில் சிரமமின்றி கடன் பெற வசதியை ஏற்படுத்திடவும் மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வலியுறுத்தும்.

ii) சிறு, குறு தொழில் முனைவோருக்கு (MSME) பேரிடர் காலங்களில் சேதத்திற்குள்ளாகிற போது கடன் தவணை செலுத்தும் கால அவகாசம் மற்றும் வட்டித் தொகை தள்ளுபடி செய்திட வலியுறுத்துவோம்.

iii) சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களுக்கு 25 சதவீதமாக உள்ள வருமான வரியை குறுந்தொழிலுக்கு 10 சதவீதமாகவும் சிறுதொழில்களுக்கு 15 சதவீதமாகவும் மாற்றி அமைக்க வலியுறுத்துவோம்.

iv) சிறு, குறு நடுத்தர தொழில்களுக்கும், நன்னீர் மீன்வளர்ப்பு, உவர்நீர், இறால் வளர்ப்பு, கோழி வளர்ப்பு தொழில்களை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு மின்கட்டணத்தில் 50 சதவீத மானியம் வழங்கிட வலியுறுத்தப்படும்.

v) நாகப்பட்டினத்தில் மீன்களைப் பதப்படுத்த குளிர்சாதன நிலையம் அமைத்துத் தர வலியுறுத்துவோம்.

vi) சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களின் குறைகளை தீர்க்கவும் தேவையான தீர்வுகளை வழங்கவும் டான்ஸ்டியா போன்ற மாநில அளவிலான அமைப்புகளை National MSME வாரியத்தில் உறுப்பினராக சேர்க்க வலியுறுத்தப்படும்.

## 33. விவசாயத்தை உயிர்நாடியாக காப்போம் :

### i) தென்னை மற்றும் பனை விவசாயிகளின் நலன்:

தென்னை மற்றும் பனை விவசாயிகளின் நலன் காத்திடவும், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் அனைத்து வயதினரின் உடல் நலம் பேனவும், கிராமப்புற பொருளாதாரம் மேம்படவும், வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், இரசாயன பானங்களினால் ஏற்படும் தீமைகள் தடுக்கப்படவும், விவசாயிகளின் உற்பத்தி பொருளான நீரா, இளநீர், கரும்பு சாறு, பதநீர், பனை நுங்கு ஆகியவற்றை விவசாயிகளே நேரடியாக இரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் அனைத்து மத்திய அரசு அலுவலக வளாகங்களில் நாடெங்கும் விற்பனை செய்ய மத்திய அரசு அனுமதி வழங்க வலியுறுத்தப்படும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும்.

### ii) விதை உற்பத்தி மானியம் மீண்டும் வழங்கப்பட வேண்டும் :

விவசாயிகளுக்கு மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த விதை உற்பத்தி மானியம் நிறுத்தப்பட்டுவிட்டது. மத்திய அரசை காரணம் காட்டி மாநில அரசும் மானியத்தைக் குறைத்துவிட்டது. இதனால், தரமான விதைகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, விளைச்சலைப் பெருக்க மீண்டும் விதை உற்பத்தி மானியத்தை வழங்கிட மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

### iii) தென்னை விவசாயிகளின் நலன்:

தமிழகத்தில் ஆண்டு முழுவதும் அதிக நிலப்பரப்பில் நடைபெற்று வருவது தென்னை விவசாயமாகும். விவசாயிகளுக்கு அதிகப்படியான பயன் தருகின்ற, தென்னையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கொப்பரையை ஆண்டு முழுவதும் கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவும், தென்னை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான கொப்பரைக்கு ரூ. 150/– (MSP) குறைந்தபட்ச ஆதார விலையை பெற்றுத் தந்திட மத்திய அரசு நிதி உதவியோடு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உடலுக்கு அதிக கெடுதல் விளைவிக்கும் பாமாயில் வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கின்ற காரணத்தால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பாமாயில் இறக்குமதியை தவிர்த்து, உடல் ஆரோக்கியத்திற்கு உகந்த தேங்காய் எண்ணெய்யை பொது விநியோகத் திட்டத்தில் சேர்த்து மக்கள் பயன்பெறும் வகையில் நடைமுறைப்படுத்திட நடவடிக்கை எடுக்கவும், சில கார்ப்பரேட் சமையல் எண்ணெய் நிறுவனங்கள் இதற்கு தடையாக இருந்தாலும், தேங்காய் எண்ணெய் பயன்பாட்டை ஊக்குவிக்கின்ற வகையில் உரிய விழிப்புணர்வு நடவடிக்கையை மத்திய அரசு மூலம், தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கைகளின் வாயிலாக வெளியிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### iv) தென்னை நார் மற்றும் கயிறு தொழில்களை ஊக்குவித்தல்:

தமிழகத்தில் கிராமப்புற விவசாயம் சார்ந்த தொழில்களில் அதிகப்படியான வேலை வாய்ப்பு தருவது தென்னை மற்றும் தென்னை சார்ந்த தொழிலாகும். கடந்த மூன்றாண்டுகளில் படிப்படியாக நசிந்து வரும் இத்தொழிலைக் காப்பாற்ற குறைந்த வட்டி விகிதத்தில் மத்திய அரசு கட்டுப்பாட்டிலுள்ள வங்கிகள் மூலமாக கடன் வழங்குவதற்கும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஏற்கெனவே வங்கியில் பெற்ற கடனை மறுசீரமைப்பு செய்யப்பட நடவடிக்கை எடுக்கவும், மேலும், தற்போது தென்னை நார் சீனா நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நாட்டிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக தென்னை நார் மாற்றப்பட்டு உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. அதே போன்ற நிலையை நம் நாட்டிலேயே மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக தென்னை நார் மாற்றுவதற்கு தேவையான தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சி வழங்குவதற்கு பொள்ளாச்சி உள்ளிட்ட தேவையான பகுதிகளில் பயிற்சி கூடமும், ஆய்வு கூடமும் அமைத்திட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடவடிக்கை எடுக்கும். மேலும் கயிறு தொழிலை மத்திய மற்றும் மாநில சுற்றுச்சூழல் துறைகள் வெள்ளை நிற (Whight Catageory) பட்டியலிலேயே நிலை நிறுத்திடவும், நசிந்து வரும், இத்தொழிலைக் காப்பாற்றிட மின்கட்டணத்தையும் குறைக்க தேவையான மானியம் வழங்கவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசு மூலம் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தும்.

### v) விவசாயப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை :

விவசாய விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க, தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு அதிகபட்ச சில்லரை விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படுவது போன்று, விவசாய விளை பொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும். அதேபோல், காய்கறி, பழம் போன்ற இருப்பு வைக்க இயலாத பொருள் உற்பத்தியை

மேம்படுத்த அதிக அளவில் உணவு பதப்படுத்தும் தொழிற்பேட்டைகளை தொடங்க, தமிழ் நாட்டிற்கு போதிய நிதியுதவி அளிக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

vi) தேங்காய் கொப்பரை மற்றும் தேங்காய்க்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள சேவை கட்டணம் (1% Cess)–ல் இருந்து தமிழகம் முழுவதும் முழு விலக்கு அளிக்க வலியுறுத்துவோம்.

vii) விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்கும் மானியத் தொகை ரூ. 6,000/–த்தை ரூ. 12,000/–ஆக உயர்த்தி வழங்க வலியுறுத்துவோம்.

viii) விவசாயிகள் நலன் கருதி, பழங்கள், காய்கறிகள், பூக்கள் சேமித்து வைக்க குளிர்சாதன வசதியுடன் சேமிப்புக் கிடங்குகள், தேவையான இடங்களில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ix) விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு தேவையான இடங்களில் சேமிப்பு கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

x) மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் அளிக்க, மரவள்ளிக் கிழங்கில் இருந்து எத்தனால் உற்பத்தி செய்ய வலியுறுத்துவோம்.

xi) சென்னையில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தை தமிழ் நாட்டிலேயே அதிகம் தென்னை பயிரிடும் பொள்ளாச்சிக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்துவோம்.

xii) ராஜஸ்தான், டில்லி, கல்கத்தா, அசாம், ஜம்மு போன்ற வடக்கு, மேற்கு, வடகிழக்கு பயணிகள் ரயிலில் இளநீர், பதநீர், நீராபானம், தேங்காய் கொண்டு செல்ல ஒரு சரக்குபெட்டி இணைக்கவும் அதில் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் வலியுறுத்துவோம்.

xiii) பண்ருட்டியில் முந்திரியை ஏற்றுமதி செய்ய 100 ஏக்கரில் கிளஸ்டர் அமைக்க வலியுறுத்துவோம்.

xiv) பண்ருட்டியில் உற்பத்தியாகும் பலாப்பழத்தை பதப்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக உலகமெங்கும் சந்தைப்படுத்த குளிர் சாதன சேமிப்புக் கிடங்கு 50 ஏக்கரில் அமைத்துத் தர வலியுறுத்துவோம்.

xv) பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக உள்ள காவிரி டெல்டா பகுதியான வேதாரண்யம்–வண்டுவாஞ்சேரியில் அறிவிக்கப்பட்ட மெகா உணவுப் பூங்கா பணிகளை தொடங்கிட வலியுறுத்துவோம்.

xvi) இயற்கை விஞ்ஞானி மறைந்த நம்மாழ்வார் அவர்களின் செயல்முறைகளையும் மற்றும் மறைந்த நெல் ஜெயராமன் அவர்களின் செயல்முறைகளையும் அமல்படுத்தவும், இவர்களுக்கு பத்ம விருதுகளில் ஒன்றை வழங்கிட வலியுறுத்துவோம்.

xvii) விவசாயிகள் பயன்படுத்தும் விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு பூச்சி கொல்லிகள், பூஞ்சான் கொல்லிகள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள், களைக் கொல்லிகள் ஆகியவற்றிற்கு GST–யிலிருந்து விலக்கு அளிக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

xviii) வேளாண்மை கருவிகள் அனைத்திற்கும் 50 சதவீத மானியம் வழங்கவும், வேளாண்மை கருவிகளுக்கு GST–யிலிருந்து வரி விலக்கு அளிக்கவும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

xix) பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை வருவாய் கிராம அளவில் என்பதை மாற்றி, தனி புல எண்ணில் உள்ள பாதிக்கப்படும் விவசாயப் பயிர்களுக்கு காப்பீட்டுத் திட்டம் வழங்கப்பட வலியுறுத்துவோம்.

xx) நெல் குவிண்டாலுக்கு ரூ. 5,000/–, கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 6,000/– என விலை நிர்ணயம் செய்திட வலியுறுத்துவோம்.

xxi) தென்னை, வாழை உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் அனைத்திற்கும் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய வலியுறுத்துவோம்.

xxii) வானிலை ஆராய்ச்சி மையம் 100 சதவீத ரேடார் கருவிகள் பொருத்தப்பட்டு நாட்டு மக்களுக்கு இயற்கை இடர்ப்பாடுகள் குறித்து எச்சரிக்கை அறிவிப்புகள் சரியான நேரத்தில் கிடைத்திட, உரிய நடவடிக்கை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்துவோம்.

xxiii) விவசாயிகள் இயற்கை விவசாயம் செய்திட ஏதுவாக இயற்கை உயிரி உரங்களைத் தயாரித்திட மத்திய அரசை நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

xxiv) வேளாண் விளை பொருட்களான பனைக்கருப்பட்டி, நீரா பானங்களையும் மற்றும் பதனீரையும், பதப்படுத்திட குளிர்பதன நிலையம் அமைத்திட வலியுறுத்துவோம்.

xxv) பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்காமல் மத்திய அரசே ஏற்று நடத்த வலியுறுத்தப்படும். கொடி வகை, காய், பழ வகை தோட்டப் பயிர்களுக்கு மத்திய அரசு காப்பீட்டில் இணைக்க வலியுறுத்தப்படும்.

## 34. மத்திய–மாநில அரசுகளிடையேயான நிதி பகிர்வு :

i) மத்திய–மாநில அரசுகளுக்கு இடையேயான தற்போதுள்ள நிதி பகிர்வு முறையில் சிறப்பாக செயல்படும் தமிழ் நாடு போன்ற மாநிலங்கள் வஞ்சிக்கப்படும் நிலையில் உள்ளது. மத்திய நிதி ஆணையங்களும் பாரபட்சமாகவே நடந்து கொள்கின்றன. சமச்சீர் வளர்ச்சி என்ற பெயரில் திறமையாக செயல்படும் மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகின்றன. எனவே, மத்திய அரசினுடைய தொகுப்புக்கு செல்கின்ற வருவாயில் நிதிக்குழு நிர்ணயித்திருக்கின்ற நெறிமுறைப்படி, சிறப்பாக செயல்படும் தமிழ் நாட்டைப் போன்ற மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி தொடர்ந்து குறைந்து வருகிறது. எனவே, மத்திய அரசால் நியமிக்கப்படும் நிதிக்குழு பாரபட்சமின்றி நிதி ஒதுக்கவும், சமச்சீர் வளர்ச்சியுடன் திறமையான செயல்பாட்டுக்கும் ஊக்கம் அளிக்க சமநிலையில் பகிர்வு அளவு இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படும்.

ii) மாநிலங்களுக்கு உரிய விற்பனை வரியை மத்திய அரசு எடுத்துக்கொண்டு பொருட்கள் மற்றும் சேவை வரியை அமல்படுத்திய பின்பு மாநிலங்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதை மத்திய அரசு நிறுத்திவிட்டதால் தமிழ் நாட்டிற்கு ஆண்டுக்கு சுமார் **20,000** கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. பொருட்கள் மற்றும் சேவை வரி விதிப்பால் மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய பொருட்கள் மற்றும் சேவை வரி இழப்பீட்டு செஸ் போடப்பட்டது. அந்த செஸ் வரி, கொரோனா காலத்தில் பெற்ற கடனை ஈடுசெய்ய **2026** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. **2026–க்கு** பிறகு பொருட்கள் மற்றும் சேவை வரியோடு இந்த செஸ் இணைக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம். இதனால் மாநில அரசுகளுக்கு கூடுதல் நிதி ஆதாரம் கிடைக்கும்.

iii) பொருட்கள் மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்திய பின்பு, மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கான நிதி ஆதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக மாநிலங்களுக்கான நிதி ஆதாரம் மத்திய அரசைவிட குறைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பல மாநிலங்களில் அம்மாநில பொருளாதார உற்பத்தி மதிப்பில் சொந்த வரி வருவாயின் பங்கு குறைந்துவிட்டது. எனவே, தற்போதுள்ள மத்திய, மாநிலங்களுக்கு இடையேயான நிதிப் பகிர்வு முறையில் உரிய மாற்றங்களும், திருத்தங்களும் செய்யப்பட வேண்டும். உதாரணமாக, பொருட்கள் மற்றும் சேவை வரியில் மத்திய, மாநில அரசுகள் CGST, SGST என பிரித்துக்கொள்வதுபோல் தனிநபர் வருமான வரியிலும் **50** சதவீதம் வரை வரி வசூல் செய்யப்படும் மாநிலங்களுக்கு பிரித்து வழங்கப்பட வேண்டும். நிகரமாக உள்ள **50** சதவீதத்தை மட்டும் மத்திய அரசின் பகிர்வு நிதிக்கு கொண்டு செல்லலாம். இதற்கான நிபுணர் குழு அமைத்து நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

iv) மத்திய அரசு வசூலிக்கும் செஸ், சர்சார்ஜ் (Cess, Surcharge) தற்போது மத்திய வரி வருவாயில் **20** சதமாக உயர்ந்துவிட்டது. இது, மாநில அரசுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதியில் சேர்க்கப்படுவதில்லை.

இதனால் ஆண்டுக்கு 10 லட்சம் கோடி அளவு நிதி மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. இந்த செஸ், சர்சார்ஜையும், மத்திய பகிர்வு நிதியில் சேர்க்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்துவோம்.

**35. மாநில அரசுகள் கடன்கள் பெற மத்திய அரசின் உத்தரவாதம் :**

மாநில அரசுகள் தங்களின் மாநில வளர்ச்சிக்கான திட்டச் செலவுக்கு வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்க வேண்டுமென்றால், மத்திய அரசின் எதிர் உத்தரவாதம் (Counter Guarantee) பெற வேண்டும், ஆனால் அதை தருவதில்லை. அதே சமயம் மத்திய அரசு மட்டும் வெளிநாட்டிலிருந்தோ, வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலிருந்தோ கடன் எவ்வளவு வேண்டுமென்றாலும் பெற்றுக்கொள்ளும் நிலை இருக்கிறது. அதேபோல மூலதனச் செலவுக்காகவும், திட்டச் செலவுக்காகவும் கடன் பெற, வாங்கும் கடனுக்கு திட்டத்தின் தெரிவு நிலை (Project Viability) என்னும் அடிப்படையில் மத்திய அரசின் எதிர் உத்தரவாதம் (Counter Guarantee) நிபந்தனையின்றி மாநில அரசுகளுக்கு தர வேண்டும் என்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாநில நலன் கருதி வலியுறுத்துகிறது.

**36. இலங்கைத் தமிழர்களுக்கான இரட்டைக் குடியுரிமை :**

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான போரில் பாதிக்கப்பட்டும் அதற்கு முன்னால் பாரத பிரதமர் – இலங்கை பிரதமர்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் அடிப்படையிலும் தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும் ஆண்டாண்டு காலமாக அகதிகளாக இருந்து வரும் இலங்கைத் தமிழர்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட "இரட்டைக் குடியுரிமையை" விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**37. பெட்ரோல் – டீசல் விலை நிர்ணய முறை :**

உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை கூடும்போது, எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்துகின்றன. ஆனால்,

விலை குறைகின்றபோது பெட்ரோலிய பொருட்களின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் குறைப்பதில்லை. முன்பு மத்திய அரசே விலை நிர்ணயம் செய்து வந்த நிலையில், தற்போது அந்தப் பொறுப்பு எண்ணெய் நிறுவனங்களிடம் உள்ளபோது, அவை மக்கள் நலனை கருத்தில்கொண்டு செயல்படுவதில்லை. வியாபார, லாப நோக்கத்தோடு பிரச்சனைகளை அணுகுகின்றன. எனவே, நுகர்வோர் நலம் பேணும் வகையில் விலை நிர்ணயத்தை மத்திய அரசே மேற்கொண்டு, பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் குறைக்கப்பட வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

### 38. சமையல் எரிவாயு விலை கட்டுப்பாடு :

i) பெண்களின் பெரும் சுமையைக் குறைக்கும் நோக்கில், எரிவாயு சிலிண்டர் விலையை குறைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ii) சமையல் எரிவாயு விலை கட்டுக்கடங்காமல் ஏறுமுகமாக இருந்து வருகிறதே தவிர மத்திய அரசு, விலை நிர்ணயத்தில் தலையிடுவதில்லை. மத்திய அரசு இலவச சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் உருளை போன்றவற்றை குறிப்பிட்ட குடும்பங்களுக்கு விலையில்லாமல் கொடுத்தாலும் அது குடும்ப வாழ்வாதாரத்திற்கேற்ப போதிய தீர்வாக இல்லை. எனவே, சமையல் எரிவாயு விலை நிர்ணயத்திலும் மத்திய அரசு பொறுப்பேற்று குறைந்த விலையில் கிடைக்கவும், குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் ஆண்டுக்கு ஆறு எரிவாயு உருளைகளை விலையில்லாமல் அளித்து, குடும்பத் தலைவிகளின் சிரமத்தைக் குறைக்கும் வகையிலும் உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

### 39. போதைப் பொருள் ஒழிப்பு :

சர்வதேச அளவில் போதைப் பொருட்கள் நடமாட்டம் மற்றும் அவற்றின் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், தமிழ் நாட்டிலும் திமுக நிர்வாகிகளின் ஆதரவோடு திட்டமிட்டு சமுதாய சீரழிவுக்கு

காரணமாக இருக்கும் கஞ்சா, கோகைன், ஹெராயின், மெத்தா பெட்டமைன் போன்ற அதிக வீரியமுள்ள போதைப் பொருட்களை இளைஞர்கள், மாணாக்கர்கள், உழைக்கும் வர்கத்தினர் பயன்படுத்த ஏதுவாக புழக்கத்தில் விட்டுள்ளதாக புலனாய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது, இதன் விளைவாக பொருளாதார சீரழிவு, நாட்டின் வளர்ச்சி பாதிப்பு, மாணவ–மாணவிகள் பாதிப்பு, சமுதாய சீரழிவுகள் பெருமளவு நிகழ்ந்த வண்ணம் உள்ளது. எனவே, இரும்புக் கரம் கொண்டு மத்திய, மாநில அரசுகள் போதைப் பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், அதற்கு மூளையாக இருந்து செயல்படுபவர்களையும் தண்டித்து சமுதாய சீரழிவுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும், தேசிய அளவில் போதை பொருள் விநியோகத்தை ஊக்கப்படுத்துவதாக புலனாய்வுத் துறை மூலம் கூறப்பட்டுள்ள திமுக நிர்வாகிகள் மீது, மத்திய அரசு சட்டப்பூர்வமான கடும் நடவடிக்கைகளை எடுக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**40. நெகிழிப் பொருட்களுக்கான நிரந்தர தடை :**

சுற்றுச் சூழலுக்கு ஆபத்தை விளைவிக்கும் நெகிழி சம்மந்தப்பட்ட அனைத்து வகையான பொருட்கள் உற்பத்தி, விற்பனை, பயன்பாடு ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்பட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் நெகிழி பயன்பாடு முற்றிலுமாக தடுக்கப்பட்டது. ஆனால், தற்போதைய திமுக ஆட்சியில் நெகிழி ஒழிப்புத் திட்டம் செயலிழந்துவிட்டது. நாடு தழுவிய நிலையில் நெகிழிக்கு மூடுவிழா நடத்த, நெகிழி ஒழிப்புத் திட்டத்தை செயல்படுத்திட மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**41. சீமை கருவேல மரங்களை அகற்றும் திட்டம் :**

வேளாண்மையையும், மண் வளத்தையும் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரத்தையும் சீரழிக்கும் வகையில் மாநிலம் முழுவதும் உள்ள ஏரிகள், நீர் பிடிப்பு பகுதிகள், அரசு நிலங்களில் தானாகவே வளர்ந்துள்ள

சீமை கருவேல மரங்களை அகற்ற மத்திய அரசின் நிதி உதவியோடு ஒரு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**42. விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் :**

உலகுக்கே உணவளிக்கும் விவசாயப் பெருமக்கள் ஆண்டுதோறும் ஓய்வின்றி உழைத்தும் தங்களின் முதிர்வு கால வாழ்க்கைக்கு எந்தவித சேமிப்பும் இல்லாமல் வயதான நிலையில் வறுமையில் வாடும் விவசாயிகளுக்கு அவர்களது ஓய்வு காலத்திற்கான ஊதியமாக மாதம் ரூ. 5,000/– வழங்கும் திட்டத்தை விவசாயிகளின் நலன் கருதி மத்திய அரசின் நிதி உதவியோடு செயல்படுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**43. தடையில்லா மும்முனை மின்சாரம் :**

விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரத்தை நாள் முழுமைக்கும் (24 மணி நேரமும்) தங்களுடைய விளை நிலங்களில் பயிரிட்டுள்ள பயிர்களுக்கு நேரம், காலம் நிர்ணயம் செய்யாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அளித்து வந்தது போல, மும்முனை மின்சாரத்தை நாள் முழுமைக்கும் வழங்கிட மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தேவையான உதவிகளை அளித்து விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற முன்வர வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**44. கூட்டாட்சி மொழிகளுக்கு உரிய அங்கீகாரம் :**

அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றிருக்கும் தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளுக்கும் அந்த அட்டவணையில் இடம்பெற்றுள்ள மொழிகளில் ஒன்றான இந்தி மொழிக்கு, மத்திய அரசின் அலுவல் மொழி என்ற நிலையில் மத்திய அரசால் வழங்கப்பட்டு வரும் அனைத்து வாய்ப்புகளும், அட்டவணையில் இடம் பெற்றுள்ள தமிழ் மொழி உள்ளிட்ட மற்ற மொழிகளுக்கும் ஆட்சி மொழி அந்தஸ்து வழங்கப்பட்டு, மொழி கூட்டாட்சியை நிலைநிறுத்த மத்திய அரசை அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி மொழிப் பிரச்சனைக்குத் தீர்வு காணும்.

**45. மாநிலங்களுக்கு இடையேயான தேசிய வளர்ச்சி ஆணையத்தை செயல்படுத்துதல் :**

மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சனைகளுக்கு சுமூகமான தீர்வை எட்ட அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள தேசிய வளர்ச்சி ஆணையத்தின் கூட்டம் சமீப காலமாக கூட்டப்படுவதே இல்லை. பிரதம அமைச்சர் தலைமையில் கூட்டப்பட வேண்டிய அத்தகைய கூட்டங்கள் கூட்டப்படாத காரணத்தால், நதிநீர் பிரச்சனை உட்பட பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமலும், உச்சநீதிமன்றங்களில் வழக்குகளாக நிலுவையிலும் இருந்து வருகிறது. இதற்கெல்லாம் தீர்வு காணும் வகையில் ஆண்டுக்கு இரண்டு முறையாவது மாநிலங்களுக்கு இடையேயான ஆணையத்தின் மண்டல் கூட்டத்தைக் கூட்ட மத்திய அரசை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி, தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சிகளை மேற்கொள்ளும்.

**46. தமிழகத்தில் பாதுகாப்புத் தளவாட உற்பத்தி மையம் :**

மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அறிவித்த பாதுகாப்பு தளவாட உற்பத்தி மையம் ஏற்படுத்தும் திட்டம் உத்திரப் பிரதேசத்திலும், தமிழ் நாட்டிலும் செயல்படுத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், உத்திரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துவிட்டது. ஆனால், தமிழ் நாட்டில் இதுவரை துவங்கப்படுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. மாற்றாந்தாய் மனப்பான்மையோடு துவக்கப்படாமல் இருந்து வரும் தமிழ் நாடு பாதுகாப்புத் தளவாட உற்பத்தி மையம் திட்டத்தை, உடனடியாக துவக்க மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி, உறுதியளிக்கப்பட்ட அத்திட்டத்தை செயல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

**47. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை :**

i) மதுரையில் நிறுவப்பட இருக்கும் எய்ம்ஸ் மருத்துவமனையை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர துரித நடவடிக்கை

எடுக்குமாறு மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

ii) அதுபோன்று, கோயம்புத்தூரிலும் எய்ம்ஸ் மருத்துவமனை அமைவதற்கு வலியுறுத்துவோம்.

**48. நெடுஞ்சாலை சுங்கச் சாவடிகளை அகற்றுதல் :**

பொதுமக்களுக்கு பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்துகின்ற வகையிலும், சாலை போக்குவரத்துக்கு காலதாமதம் ஏற்படுத்துகின்ற வகையிலும், சுங்க வசூல் என்ற வகையில் நியாயமற்ற வசூலை மேற்கொண்டு வருகின்ற சுங்கச் சாவடிகளை முற்றிலுமாக அகற்றுவதற்கு மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**49. தமிழகத்தில் புதிய நகரங்களில் மெட்ரோ திட்டங்கள் விரிவாக்கம் :**

மெட்ரோ இரயில் திட்டம் மக்களுக்கு குறிப்பாக மாநகர் மற்றும் புறநகர் பகுதி வாழ் மக்களுக்கு பயணிக்க ஏதுவாகவும், பயனுள்ளதாகவும் இருந்து வருகிறது. மேலும், இத்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் சென்னையில் மட்டுமல்லாமல், மீதமுள்ள முதல் அடுக்கு, இரண்டாம் அடுக்கு பெருநகரங்களான கோவை, மதுரை ஆகிய நகரங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி மாநிலங்களுக்கு அதிக நிதிச் சுமையை சுமத்தாமல் மத்திய அரசே தேவையான இடங்களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**50. மகளிர் உரிமைத் தொகை :**

மகளிர் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒவ்வொரு ஏழை குடும்பத் தலைவிக்கும் மாதந்தோறும் ரூ. 3,000/– ஊக்கத் தொகையாக வழங்கிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

**51. இலவச வீட்டு மனை மற்றும் வீடு கட்டும் திட்டம் :**

i) சொந்த வீடு இல்லாமல் அவதியுறும் ஏழை, எளிய மக்களுக்கு அரசே இலவச குடியிருப்பு, மனை நிலம் வழங்கி, இலவசமாக வீடுகளும் கட்டிக்கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த

போதிய நிதி உதவியை மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்கிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

ii) பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் மானியமாக ரூ. 2.70 லட்சம் வழுங்கப்படுகிறது. இத்தொகையை இன்றைய விலைவாசி உயர்வுக்கு ஏற்ப மானியமாக ரூ. 5 லட்சமாக உயர்த்தி வழங்க வலியுறுத்துவோம்.

**52. கிராம பொருளாதாரம் மேம்பாட்டு திட்டம் :**

கிராமப்புற பொருளாதாரத்தை பெருக்கவும், தனி நபர் வருமானத்தை உயர்த்தவும், ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் ஆர்வமுள்ள குடும்பத்தினர் அனைவருக்கும் விலையில்லாமல் கறவை மாடுகள் அல்லது ஆடுகள் மற்றும் கோழிகள் வழங்கி கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்திடும் வகையில், மத்திய அரசின் நிதி உதவியோடு செயல்படுத்திட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், உரிய நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தும்.

**53. இளைஞர் நலம் வேலைவாய்ப்பு :**

i) **வேலைக்கு உத்தரவாதம் :**

திறமைக்கும், தகுதிக்கும் ஏற்ற வேலை; வேலைக்கு ஏற்ற ஊதியம் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசை வலியுறுத்துவோம். படித்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, தொழில் பயிற்றுநர் திட்டம் போன்றவற்றை தீவிரப்படுத்த மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ii) **வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்போருக்கு கூடுதல் உதவித் தொகை :**

பள்ளி, கல்லூரி படிப்பை முடித்து வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலையில் சேர பதிவு செய்து காத்திருக்கும் இருபாலருக்கும் தற்போது வழங்கி வரும் மாதாந்திர உதவித் தொகையை உயர்த்தி வழங்கவும், அந்த உதவியைப் பெற நிர்ணயிக்கப்பட்ட கால அளவை நீக்கி

அனைவருக்கும் அவர்கள் வேலை வாய்ப்பு பெறும் வரை வழங்கி, அவர்களுடைய வாழ்வாதாரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

iii) **இளைய சமுதாயத்தினருக்கு தனித் திறன் மேம்பாட்டு பயிற்சி :**

கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைய சமுதாயத்தின் தனித் திறனை அடையாளம் கண்டு அவர்களின் தனித்திறனை மேம்படுத்திடவும், அறிவாற்றல் மிக்க, ஆற்றல் சார்ந்த இளைய சமுதாயத்தை உருவாக்கிடவும், சர்வதேச தனித்திறன் மேம்பாட்டு பயிற்சியாளர்களைக் கொண்டு விரிவான அளவில் முழுமையாக தனித்திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தை செயல்படுத்தி, 100 சதவீதம் அனைவரும் இத்திட்டத்தில் பயனடையும் வகையில் திட்டத்தை செயல்படுத்திடவும் ஒளி மயமான நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தை இளைய சமுதாயத்திற்கு உருவாக்கி தந்திடவும் துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

iv) **இளைய சமுதாயத்தினருக்கு தனியார் வேலை வாய்ப்பை உறுதி செய்தல் :**

இளைய சமுதாயத்தின் வேலைவாய்ப்பு தேடலுக்கு நிரந்தரத் தீர்வு காண்கின்ற வகையில் தனியார் வேலை வாய்ப்புகளை உறுதி செய்திட சிறு, குறு மற்றும் பெரு நிறுவனங்களின் முழுமையான பங்களிப்போடு மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்களை தேவைக்கேற்ப மாவட்டங்கள் தோறும் தொடர் முகாம்களை நடத்தி இளைய சமுதாயத்திற்கு வேலை வாய்ப்பை உறுதி செய்திடவும், ஆண்டுக்கு குறைந்தபட்சம் 5 லட்சம் பேருக்கும், அதிகபட்சமாக 10 லட்சம் நபர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்கிடவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

**54. மீனவர் நலன் :**

தமிழக கடற்கரை ஓரங்களில் உள்நாட்டு மீனவர்கள் நலன் கருதி, மீனவர்கள் எளிதாக கடன் பெற மீனவர்களுக்கென்று பிரத்யேக வங்கிகள், கடல் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள் வசிக்கும் ஒவ்வொரு பகுதிகளிலும் இவ்வங்கிகள் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்க

வலியுறுத்துவோம். கடல் மீனவர்கள் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு பிரத்யேகமாக இலவச வீடுகள் கட்டித் தரவும் நடவடிக்கை எடுக்கப்படும். கடல் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள் ஆகியோர்களுக்கு பொருளாதார ஏற்றம் பெறுவதற்கு விசைப் படகுகள், மீன்பிடி கலன்கள், வலைகள் போன்றவையும், உள்நாட்டு மீனவர்களுக்கு பரிசல்கள், வலைகள், 13 கடற்கரை மாவட்டங்களில் மீனவர்கள் பாதுகாப்பாக தொழில் செய்ய ஏதுவாக, சிறிய மீன்பிடி துறைமுகங்கள், பெரிய மீன்பிடி துறைமுகங்கள், தங்கு தலங்கள் மற்றும் கடல் அரிப்பை தடுக்க தூண்டில் வலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்கள் நேரடியாக பயன்பெறும் வகையில் தேசிய கடலோர மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டம், மீனவர் மற்றும் மீனவ மக்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடி குறைவு காலம் மற்றும் மீன்பிடி தடை காலங்களில் மத்திய அரசு அதன் பங்கை இரட்டிப்பாக உயர்த்தித் தர வலியுறுத்துவோம். மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் அளவை உயர்த்தி மத்திய ஆயத் தீர்வை மற்றும் மாநில விற்பனை வரியிலும் முழுமையாக விலக்களிக்க வலியுறுத்துவோம். மீனவர்கள் தொழில் நிமித்தமாக நடுக் கடலில் காணாமல் போகின்ற சூழ்நிலையில் அவர்களை மீட்க கடலோர மாவட்டங்களின் தேவையான இடங்களில் “ஹெலிகாப்டர் தளம்” அமைக்க வலியுறுத்தப்படும்.

கடற்கரையை நம்பி வாழும் மீனவர்கள் அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்ற வகையில் நெய்தல் நில மீட்சித் திட்டம் மீனவர்களுக்கு முற்றிலும் எதிரானது. எனவே, இத்திட்டத்தை செயல்படுத்தக்கூடாது என்பதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக இருக்கிறது.

**55. கிராமப்புற இளைஞர்களுக்கு சர்வதேச அளவிளான விளையாட்டு பயிற்சி மையம் :**

i) கிராமப்புற விளையாட்டு வீரர்களின் திறமைகளை ஊக்குவிக்க சர்வதேச அளவிலான வசதிகளைக் கொண்ட பயிற்சிகளை அனைத்து கிராமப்புற விளையாட்டு வீரர்களுக்கும் கிடைத்திடும் வகையில்

உலகத் தரத்திலான நவீன விளையாட்டு பயிற்சி மற்றும் வழிகாட்டு மையங்கள் மாவட்டந்தோறும் அமைத்திடவும், தேர்ந்தெடுக்கப்படுகின்ற அனைத்து விளையாட்டு வீரர்களின் திறமைகளை வளர்த்திடவும், ஊக்குவித்திடவும் தேவையான அதிகபட்ச ஊக்கத் தொகையினை வழங்கிடவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ii) நமது பாரம்பரிய விளையாட்டான 'கபடி' விளையாட்டை ஒலிம்பிக் போட்டியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

**56. சுற்றுலா மையம் மேம்பாடு செய்திட நடவடிக்கை எடுப்போம் :**

i) பழனி–கொடைக்கானல் ரோப்கார் அமைக்க வலியுறுத்துவோம்.

ii) கும்பகோணத்தை ஆன்மிக சுற்றுலா மையமாக மேம்படுத்திட வலியுறுத்துவோம். கும்பகோணம் மகாமகத் திருவிழா, வேளாங்கண்ணி அன்னை மாதா திருவிழா, நாகூர் ஆண்டவர் பெரிய கந்துாரி விழாவையும் தேசியத் திருவிழாவாக அறிவிக்க வலியுறுத்துவோம்.

**57. மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு அளித்தல் :**

மாற்றுத் திறனாளிகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்திட அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு வழங்குவதோடு வாழ்வாதார உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ. 5,000/– வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

**58.** சிறுபான்மையின மாணவர்களின் கல்வி உதவித் தொகை மத்திய அரசால் முழுமையாக வழங்கவும், அப்பெற்றோரின் ஆண்டு உச்ச வரம்பு ரூ. 5 லட்சமாக உயர்த்தவும் வலியுறுத்துவோம்.

**59. மூன்றாம் பாலினத்தவரின் வாழ்வாதாரத்திற்கு உறுதி அளித்தல் :**

மூன்றாம் பாலினத்தவரின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படை தேவையான உதவித் தொகை உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

**60. ரயில் சேவை கூடுதல் வழித்தடத்தில் அமைத்திட நடவடிக்கை எடுப்போம்:**

i) சென்னையிலிருந்து காரைக்குடி வரை செல்லும் பல்லவன் எக்ஸ்பிரஸ் இரயில் மானாமதுரை வரை நீட்டிப்பு செய்ய வலியுறுத்துவோம்.

ii) மானாமதுரை – மன்னார்குடி வரை செல்லும் இரயில் திருச்சியோடு நிறுத்தப்படுகிறது. இதனை மன்னார்குடி வரை இயக்கப்பட வலியுறுத்துவோம்.

iii) போடி–தேனி–மதுரை–திண்டுக்கல்–திருச்சி–விழுப்புரம் மார்க்கமாக சென்னைக்கு மேலும் ஒரு இரயில் சேவை வழங்கி பயணிகளுக்கு உதவிட வலியுறுத்துவோம்.

iv) சென்னை–விழுப்புரம்–திருவாரூர் வழியாக காரைக்குடி வரை சென்று வந்த கம்பன் எக்ஸ்பிரஸ் இரயிலை மீண்டும் இயக்க வலியுறுத்துவோம். மேலும், இந்த இரயிலில் வேதாரண்யம் அகஸ்தியம்பள்ளி இரயில் நிலையம் வரை இணைப்புப் பெட்டிகளை இணைத்து இயக்க வலியுறுத்துவோம்.

v) போத்தனூர் இரயில் நிலையத்தை கோவை இரண்டாவது இரயில்வே முனையமாக உருவாக்க வலியுறுத்துவோம்.

vi) சென்னை முதல் செங்கல்பட்டு வரை இயக்கப்படும் மின்சார இரயிலை விழுப்புரம் வரை நீட்டிப்பு செய்ய வலியுறுத்துவோம்.

vii) விழுப்புரம்–தஞ்சை வரையிலான இரயில் பாதையில் இரண்டாவது ரயில் பாதை (Doubling) அமைக்க வலியுறுத்துவோம்.

viii) மதுரை மற்றும் கோவை போன்ற மாவட்டங்களில் மெட்ரோ ரயில் திட்டம் விரைவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

xi) மதுரை மெட்ரோ இரயில் சேவையை ஒசூர்–சூளகிரி–கிருஷ்ணகிரி வரையிலும், ஜோலார்பேட்டை முதல் ஒசூர் வரையிலும், கிருஷ்ணகிரி முதல் தருமபுரி வரையிலும் அமைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

x) மீனம்பாக்கம் வரையுள்ள மெட்ரோ இரயிலை செங்கல்பட்டு வரை நீட்டிக்கவும், மேலும் கிளாம்பாக்கத்திலிருந்து ஒரகடம் வரை மெட்ரோ இரயில் இயக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

**61. ரயில் சேவை புதிய வழித்தடத்தில் அமைத்திட நடவடிக்கை எடுப்போம்:**

i) மதுரை–வேளாங்கண்ணி மற்றும் நாகூர் ஆகிய ஊர்களுக்கு

புதிய இரயில் இயக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ii) மதுரை முதல் மேலூர் வழியாக சிவகங்கை, காரைக்குடி, சென்னை வரை புதிய ரயில் வழித்தடம் அறிவிக்கப்பட்டது. கிடப்பில் கிடக்கும் இப்பணியை விரைந்து முடிக்க வற்புறுத்துவோம்.

iii) தேனி மாவட்டம், போடி முதல் கம்பம் வரை ரயில் பாதை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

iv) திண்டுக்கல் முதல் சபரிமலை வரை அறிவிக்கப்பட்ட புதிய ரயில் வழித் தடத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

v) திண்டுக்கல், மதுரை முதல் விருதுநகர் வரை மின்சார ரயில் இயக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

vi) மதுரை முதல் தூத்துக்குடி வரை காரியாப்பட்டி வழியாக புதிய ரயில் பாதை அமைக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

vii) பாலக்காடு முதல் இராமேஸ்வரம் வரை முன்பதிவில்லாத இரயில் இயக்கப்பட வலியுறுத்துவோம்.

viii) சென்னை முதல் இராமேஸ்வரம் வரை இரவு நேர முன்பதிவில்லாத இரயில் இயக்க வலியுறுத்துவோம்.

ix) திண்டுக்கல்லில் இருந்து லோயர் கேம்ப் வரை இரயில் பாதை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

x) மதுரை – திண்டுக்கல் – சேலம் வழியாக பெங்களூரு வரை இரயில் சேவை உருவாக்க வலியுறுத்துவோம்.

xi) போடி – தேனி – மதுரை வழியாக கோயம்புத்தூர் வரை புதிய இரயில் சேவை வழங்கிட வலியுறுத்துவோம்.

xii) தேனி–மதுரை–விருதுநகர்–கோவில்பட்டி வழியாக திருவனந்தபுரத்திற்கு இரயில் சேவையை வழங்க வலியுறுத்துவோம்.

xiii) பழனியிலிருந்து திருப்பதிக்கு இரயில் வசதி ஏற்படுத்த வலியுறுத்துவோம்.

xiv) கோயம்புத்தூரில் இருந்து பொள்ளாச்சி– உடுமலைப்பேட்டை– பழனி–திண்டுக்கல்– மதுரை– ராமநாதபுரம் வழியாக ராமேஸ்வரம் வரை மீண்டும் இரயில் சேவை இயக்கிட வலியுறுத்துவோம்.

xv) கோயம்புத்தூரில் இருந்து பொள்ளாச்சி–உடுமலைப்பேட்டை– பழனி–திண்டுக்கல் – திருச்சிராப்பள்ளி – தஞ்சாவூர் வழியாக வேளாங்கண்ணி, நாகூர் வரை மீண்டும் இரயில் சேவையை இயக்கிட வலியுறுத்துவோம்.

xvi) கோயம்புத்தூரில் இருந்து பொள்ளாச்சி–உடுமலைப்பேட்டை– பழனி–ஒட்டன்சத்திரம்–திண்டுக்கல்–மதுரை வழியாக தூத்துக்குடி வரை இயக்கிட வலியுறுத்துவோம்.

xvii) பழனியில் இருந்து தாராபுரம்–திருப்பூர்–சத்தியமங்கலம்–மைசூர் வரை புதிய இரயில் பாதை அமைக்க வலியுறுத்துவோம்.

xviii) பழனியில் இருந்து தாராபுரம்–காங்கேயம் வழியாக ஈரோடு வரை புதிய இரயில் பாதை அமைக்க வலியுறுத்துவோம்.

xix) மதுரையிலிருந்து திண்டுக்கல்– காரைக்குடி–புதுக்கோட்டை– பட்டுக்கோட்டை–வேதாரண்யம் வரை புதிய ரயில் இயக்க வலியுறுத்துவோம்.

xx) கடலூர் – குறிஞ்சிப்பாடி – வடலூர் – நெய்வேலி – சிதம்பரம் மார்க்கமாக இரயில் பாதை அமைய வலியுறுத்துவோம்.

xxi) திண்டிவனம்–புதுச்சேரி–கடலூர் புதிய ரயில்பாதை அமைக்க வலியுறுத்துவோம்.

xxii) ஏற்கெனவே திட்டமிட்டபடி பணிகளை தொடர்ந்து கள்ளக்குறிச்சி முதல் வேலூர் வரையும், கள்ளக்குறிச்சி முதல் விழுப்புரம் வரையும் புதிய ரயில் பாதை அமைத்திட வலியுறுத்துவோம்.

xxiii) ரேணிகுண்டா முதல் விழுப்புரம் வரை செல்லும் இரயில் வழித் தடத்தினை இருவழிப் பாதையாக அமைத்துத் தர வலியுறுத்துவோம்.

xxiv) சென்னை இரயில்வே கோட்டத்தில் ரத்து செய்யப்பட்ட புறநகர் ரயில்களை மீண்டும் இயக்கிட வலியுறுத்துவோம்.

xxv) அரக்கோணத்தை இரயில் முனையமாக மாற்ற வலியுறுத்துவோம்.

xxvi) பாண்டிச்சேரி முதல் பெங்களூரு வரை இரயில் சேவை தொடங்க வலியுறுத்துவோம்.

xxvii) கும்பகோணம்—ஜெயங்கொண்டம்—விருத்தாசலம் மார்க்கத்தில் புதிய இரயில் பாதை அமைக்க வலியுறுத்துவோம்.

xxviii) நாகையிலிருந்து சென்னை, பெங்களூருக்கு புதிய இரயில்கள் இயக்க வலியுறுத்துவோம்.

xxix) சென்னை—வேளாங்கண்ணி வழித் தடத்தில் புதிய இரயில் இயக்க வலியுறுத்துவோம்.

xxx) காரைக்கால்—தரங்கம்பாடி—மயிலாடுதுறை இரயில் பாதையை மீண்டும் துவக்க வலியுறுத்துவோம்.

xxxi) கன்னியாகுமரி, திசையன்விளை, உடன்குடி, திருச்செந்தூர், புன்னைகாயல், தூத்துக்குடி மார்க்கமாக புதிய இரயில்வே வழித்தடம் அமைக்க வலியுறுத்துவோம்.

xxxii) கிணத்துக்கடவு – பொள்ளாச்சி வரை, பாலக்காடு கோட்டத்தில் உள்ள இரயில் வழித் தடத்தை சேலம் கோட்டத்தில் இணைக்க வலியுறுத்துவோம்.

xxxiii) சென்னை மற்றும் கோவையிலிருந்து தமிழகத்தின் தென்கோடி நகரமான கன்னியாகுமரிக்கு இருவழி இரயில் பாதை அமைக்க வலியுறுத்துவோம்.

xxxiv) உடையார்பாளையம்—ஜெயங்கொண்டம்—காட்டுமன்னார்குடி வழியாக சிதம்பரம் வரை புதிய இரயில் வழித் தடம் நீட்டிக்கப்பட வலியுறுத்துவோம்.

xxxv) குருவாயூர்—சிதம்பரம் வழி நாகப்பட்டினம் புதிய இரயில் வழித் தடத்தில் இரயில்விட வலியுறுத்துவோம்.

xxxvi) கரூரிலிருந்து பழனி வரை கரூர்—அரவக்குறிச்சி—பள்ளப்பட்டி—இடையகோட்டை வழியாக ஒட்டன்சத்திரம், பழனி வரை இரயில் பாதை அமைக்க வலியுறுத்தப்படும்.

xxxvii) தாம்பரம் மூன்றாவது இரயில் முனையப் பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

xxxviii) அடையாறு முதல் புதுச்சேரி வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலையில் புதிய இரயில் போக்குவரத்து ஏற்படுத்த வலியுறுத்தப்படும்.

xxxix) வாலாஜாபாத் இரயில்வே நிறுவனத்தில் சரக்குகளை கையாளும் வகையில் இரயில்வே சரக்கு முனையத்தை (Rail Auto Hub) விரிவாக்கம் செய்திட வலியுறுத்துவோம்.

xxxx) திருச்சி முதல் டெல்லி வரையிலான ஒரு நேரடி இரயில் சேவை உருவாக்கிட வலியுறுத்தப்படும்.

**62. ரயில்வே (ம) நெடுஞ்சாலை மேம்பாலம் அமைத்திட நடவடிக்கை எடுப்போம்:**

i) கோவை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மேம்பாலத்தை சிங்காநல்லூர் வரை நீட்டித்துத்தர வலியுறுத்துவோம்.

ii) கோவை–லாலிரோடு–தடாகம் ரோடு சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட வலியுறுத்துவோம்.

iii) குன்னூர் நகரில் ரயில் பாதையில் மேம்பாலம் கட்டிட உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

iv) மேட்டுப்பாளையம் இரயில்வே மேம்பாலம் அமைக்க வலியுறுத்துவோம்.

v) சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் டோல்கேட் பகுதி வழியாக ஆந்திரா செல்ல மேம்பாலம் அமைக்க வலியுறுத்தப்படும்.

vi) தஞ்சை மாவட்டம், ஆடுதுறையில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே இரயில் கிராஸிங்கில் மேம்பாலம் அமைத்துத் தர வலியுறுத்துவோம்.

vii) மயிலாடுதுறை நீடூர் L.C.No. 228 மற்றும் மாப்படுகை L.C. No. 229-இல் அமைய உள்ள நீண்ட கால இரயில்வே மேம்பாலத் திட்டத்தை (Railway Over Bridge) உடனடியாக செயல்படுத்த வலியுறுத்துவோம்.

**63. நான்கு வழிச் சாலை அமைத்திட நடவடிக்கை எடுப்போம் :**

i) மதுரை முதல் தொண்டி வரை உள்ள சாலையை நான்கு வழி சாலையாக அமைக்க வலியுறுத்துவோம்.

ii) நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி – கன்னியாகுமரி வரை உள்ள சாலையை நான்கு வழி சாலையாக விரைந்து செயல்படுத்திட வலியுறுத்துவோம்.

iii) திருச்சி முதல் இராமேஸ்வரம் வரை உள்ள சாலையை நான்கு வழிச் சாலையாக அமைக்க வலியுறுத்துவோம்.

iv) தஞ்சாவூர் முதல் மானாமதுரை வரை உள்ள (NH 226) சிவகங்கை சாலையை நான்கு வழிச்சாலையாக அமைந்திட வலியுறுத்துவோம்.

v) தஞ்சாவூர் முதல் சாயல்குடி வரை (SH 29) கல்லல், காளையார்கோவில், இளையான்குடி வழியாகச் செல்லும் இந்த சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்து நான்கு வழிச் சாலையாக அமைத்துத்தர வலியுறுத்துவோம்.

vi) சித்தூர் முதல் கடலூர் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்த வலியுறுத்தப்படும்.

vii) காஞ்சிபுரம்–சிப்காட்–செய்யாறு நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்த வலியுறுத்துவோம்.

viii) கிருஷ்ணகிரி முதல் திண்டிவனம் வரை தேசிய நெடுஞ்சாலை–77–யை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்த வலியுறுத்துவோம்.

ix) தஞ்சை–நாகை சாலையை 4 வழிச் சாலையாக அமைக்க வலியுறுத்துவோம்.

x) தஞ்சாவூர்–மன்னார்குடி–திருத்துறைப்பூண்டி–வேதாரண்யம்–கோடியக்கரை வரை உள்ள 110 கி.மீ. தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்திட வலியுறுத்துவோம்.

xi) சென்னை to மதுரை 6 வழிச் சாலையாக உயர்த்த வலியுறுத்துவோம்.

**64. விமான நிலையம் அமைந்திட நடவடிக்கை எடுக்கப்படும் :**

i) இராமநாதபுரத்தில் விமான நிலையம் அமைய வலியுறுத்துவோம்.

ii) தூத்துக்குடி வாகைக்குளம் விமான நிலையத்திலிருந்து சரக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்த வலியுறுத்துவோம்.

iii) சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் விமான நிலையம் அமைக்க வலியுறுத்தப்படும்.

iv) நாகப்பட்டினம்–திருவாரூர்–புதுச்சேரி மாநிலம், காரைக்கால் உள்ளடக்கியப் பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தில் விமான நிலையம் அமைய வலியுறுத்துவோம்.

v) மத்திய அரசு அறிவித்த ஒசூர் விமான நிலையத்தை விரைந்து முடித்திட வலியுறுத்துவோம்.

vi) மதுரையில் பன்னாட்டு விமான நிலையத்திற்கான உள்கட்டமைப்பை செய்து தர வலியுறுத்துவோம்.

vii) விமான கட்டணங்களை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

**65. ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைத்திட நடவடிக்கை எடுப்போம் :**

i) மதுரையில் பிஸியோதெரபி துறைக்கென "ஆராய்ச்சி கவுன்சில்" அமைத்துத் தர வலியுறுத்துவோம்.

ii) வேளாண் பொருட்களுக்கான சர்வதேச பரிசோதனை மையம் மதுரையில் அமைந்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

iii) மதுரையில் NIPER (தேசிய மருந்துசார் ஆராய்ச்சிக் கழகம்) அமைக்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

iv) இந்திய தொழில்நுட்பக் கழகம் மற்றும் மத்திய கல்வி ஆராய்ச்சிக் கழகம் மதுரையில் அமைய வலியுறுத்துவோம்.

v) பரமத்தி வேலூரில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வலியுறுத்துவோம்.

**66. துறைமுகங்கள் அமைத்திட நடவடிக்கை எடுப்போம் :**

i) கடலூரில் கப்பல் துறைமுகம் அமைக்க வலியுறுத்துவோம்.

ii) சென்னையில் இருந்து – நாகப்பட்டினத்திற்கு – கடலூர் வழியாக நீர் வழிப் பாதை போக்குவரத்து அமைய வலியுறுத்துவோம்.

**67. புவிசார் குறியீடுகள் பெற்றிட நடவடிக்கை எடுப்போம் :**

i) அப்பளத்திற்கு புவிசார் குறியீடு வழங்கிட நடவடிக்கை எடுப்போம்.

ii) குண்டு வத்தல் (Red Chilly)-க்கு புவிசார் குறியீடு வழங்க வலியுறுத்துவோம்.

iii) பரமத்திவேலூர் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு கிடைக்க வலியுறுத்துவோம்.

**68. ESI மருத்துவமனைகள் அமைய நடவடிக்கை எடுப்போம் :**

i) அருப்புக்கோட்டையில் ESI மருத்துவமனை அமைய நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

ii) ஜோலார்பேட்டையில் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு ESI மருத்துவமனை அமைத்துத் தர வலியுறுத்துவோம்.

iii) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, திருமுடிவாக்கம், ஒரகடம், வல்லம், வடகால், மாம்பாக்கம், சுங்குவார்சத்திரம் ஆகிய பகுதிகளில் சிறு, குறு நடுத்தர கனரக தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. எனவே, இங்கு உலகத்தரத்தில் ESI பொது மருத்துவமனை அமைந்திட வலியுறுத்துவோம்.

iv) மேலும், தொழிலாளர்கள் நிறைந்த இடங்களில் எல்லாம் ESI மருத்துவமனை அமைக்க வலியுறுத்துவோம்.

**69. தொழிற்சாலைகள் அமைக்கப்பட நடவடிக்கை எடுப்போம் :**

i) ஏலக்காய் மற்றும் நறுமணப் பொருட்கள் மதிப்புக்கூட்டு தொழிற்கூடங்கள் போடியில் அமைக்கப்பட வலியுறுத்துவோம்.

ii) மாம்பழக் கூழ் தொழிற்சாலை குளிரூட்டப்பட்டு பதப்படுத்தும் நிலையம் தேனி, பெரியகுளம், சேலம், நத்தம், கிருஷ்ணகிரி, தருமபுரியில் அமைத்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

iii) கிருஷ்ணகிரி தளி பகுதியில் நறுமணப் பொருட்கள் தொழிற்கூடங்கள் அமைக்கப்பட வலியுறுத்துவோம்.

**70. கல்வி மேம்பாடு :**

i) கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற மத்திய அரசை வலியுறுத்துவோம். கல்லாமையை இல்லாமை ஆக்கிடவும், ஆரோக்கியமான நல்வாழ்வு அனைவருக்கும் கிடைத்திடவும் மருத்துவத்தையும் கல்வியையும், நாட்டு மக்கள் அனைவருக்கும் முழுமையாக கிடைத்திட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ii) ஏழை, எளிய மாணவர்களுக்கு உயர்கல்வி தாராளமாக கிடைத்திட வங்கிக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. பட்டம் பெற்றவர்கள் வேலைவாய்ப்பின்றி காத்திருக்கின்ற வேளையில், அவர்களின் கல்விக் கடனை திரும்பச் செலுத்த இயலாத நிலை இருப்பதால் **“மத்திய அரசே கல்விக் கடனை முழுமையாக ஏற்று தள்ளுபடி செய்ய வலியுறுத்துவோம்.’’**

iii) மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்கவில்லை. மாநில அரசுகளின் கருத்துகளைப் பெற்று ஒத்த கருத்தோடு புதிய கல்விக் கொள்கை திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

71. GST – கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களுக்கான பணம் 90 நாட்களுக்குப் பிறகு பெறப்படுவதால், சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்கள் மாத அடிப்படையில் GST வரி தாக்கல் செய்யவும், அதற்கு காலாண்டு அடிப்படையில் GST கட்டணத்தைச் செலுத்த அனுமதி வேண்டும். இதனால் MSME–களுக்கு நிதிச் சுமை குறையும்; தொழில் வளரும். இதற்கான நடவடிக்கைகளை எடுக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

72. மதம் மாறியவர்களுக்கு, மதம் மாறுவதற்கு முன்பு அவர்கள் எந்த நிலையில் இருந்தார்களோ அதே நிலையில் அவர்களின் சலுகைகள், உரிமைகள் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

73. சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

74. சர்வதேச பரிசோதனை மையங்கள் டெஸ்டிங் லேப், பேக்கேஜிங் மையங்கள், சான்று மையங்கள் உள்ளிட்ட சான்றுகள் வழங்கக்கூடிய அமைப்புகளை மதுரையில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

75. **மருத்துவ வசதிகள் மேம்பாடு :**

மக்கள் உயிர் காக்கும் அனைத்து மருந்து வகைகளுக்கும் GST வரி விலக்கு அளித்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

76. அத்தியாவசிய உணவுப் பொருளான அரிசிக்கு மத்திய அரசு 5 சதவீத GST வரி விதித்துள்ளதை திரும்பப் பெற வலியுறுத்துவோம்.

77. **நெசவாளர் நலன் :**

i) பிரதம மந்திரியின் கிசான் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குவதைப் போல கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கும் நிதியுதவி வழங்கிட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ii) கைத்தறியில் உற்பத்தியாகி விற்பனை செய்யப்படும் பொருட்களான சேலை, வேஷ்டி, டவல் போன்ற துணி வகைகளுக்கு GST–யில் இருந்து விலக்கு அளிக்க வலியுறுத்துவோம்.

iii) தேசிய கைத்தறி நிறுவனம் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் மூலப் பொருளான நூலுக்கு 10 சதவீத மானியம் வழங்கப்படுவதை 20 சதவீதமாக உயர்த்தி வழங்க வலியுறுத்துவோம்.

iv) நூல் விலையை குறைக்கவும், கைத்தறியைக் காப்பாற்றவும் பருத்தி மீதான 11 சதவீத இறக்குமதி வரியை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டுமென வலியுறுத்துவோம்.

v) மதுரை மண்டலத்தில் தேசிய கைத்தறி தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வலியுறுத்துவோம்.

vi) மத்திய அரசின் துறைகளான இராணுவம், தபால், இரயில்வே, இவற்றிக்குத் தேவையான சீருடைகள், மெத்தை, தலையணை உறை, விரிப்பு, பெட்ஷீட் போன்ற அனைத்து துணி வகைகளையும் கைத்தறியின் உற்பத்தியில் இருந்து கொள்முதல் செய்ய வலியுறுத்துவோம்.

**78.** நாடெங்கும் மின்சாரத்தால் இயங்கும் மின்சாரப் பேருந்துகள் (எ) E–பஸ்களை தமிழ் நாட்டில் முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

**79.** பழம்பெரும் தொன்மை வாய்ந்த கோயில் மாநகராம் மதுரை மாநகரை இந்தியாவின் சுற்றுலாத் தலமாக மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**80.** மத்திய அரசின் ஏற்றுமதி மேம்பாட்டு மையம் மதுரையில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

**81.** தமிழர்களுடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், பாரம்பரியத்தையும், வீரத்தையும் பறைசாற்றக்கூடிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழா தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடந்திடவும், விழா குழுவிற்கு உறுதுணையாகவும், மாடுபிடி வீரர்களுக்கும், காளைகளுக்குமான சிறப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை செயல்படுத்தவும், மாடுபிடி வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கிடவும் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

82. பாரம்பரிய ரேக்ளா ரேஸ் மாட்டுவண்டி பந்தயத்தை தேசிய பாரம்பரிய விளையாட்டு பந்தயமாக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

83. இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மதுரையில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

84. கால்பந்து, ஹாக்கி, கிரிக்கெட், கபடி போன்ற விளையாட்டில் சிறந்து விளங்கும் தமிழ் நாடு விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இரயில்வே துறையின் வேலைவாய்ப்பில் சிறப்பு இடஒதுக்கீடு கிடைக்க வலியுறுத்துவோம்.

85. தென் மாவட்டங்களில் மதுரை, தூத்துக்குடி தொழில் வழித்தடச் சாலையில் தொழிற்பேட்டைகள் அமைத்திட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

86. மதுரையில் ராணுவ ஆள்சேர்ப்பு மையம், இராணுவ பள்ளி அமைத்து இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்திட உரிய வாய்ப்புகளை ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

87. ஏழை மற்றும் நடுத்தர மக்கள், நோயாளிகள், மாணவர்கள் நலன் கருதி 1,000/– ரூபாய்க்கு குறைவான விடுதி கட்டணங்களுக்கு GST வரியிலிருந்து விலக்கு அளிக்க வலியுறுத்துவோம்.

88. மத்திய அரசு வங்கிகளின் வட்டி விகிதங்களை உயர்த்தியதை, பழைய நிலைக்கு 7.50 சதவீதம் அளவிற்கு குறைத்திட வலியுறுத்துவோம்.

89. ஜவுளி மேம்பாடு :

i) பங்களாதேஷில் இருந்து இறக்குமதியாகும் ஜவுளிக்கு மத்திய அரசு இறக்குமதி வரி விதிக்க வலியுறுத்துவோம்.

ii) ஜவுளி தொழிலுக்கு உண்டான வங்கி வட்டி விகிதத்தைக் குறைக்க வலியுறுத்தப்படும்.

iii) கொங்கு மண்டலத்தில் அனைத்து வகையான ஜவுளி பொருள்களையும் ஒருங்கிணைத்து புதிய ஜவுளி வளாகம் அமைத்திட வலியுறுத்துவோம்.

iv) ஜவுளி ஆடைகளை வெளிநாட்டில் சந்தைப்படுத்த ஜவுளி கண்காட்சிக்கு மத்திய அரசு மானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

v) நூற்பாலைத் தொழிலின் மந்த நிலையைக் கருத்தில்கொண்டு Term Loan–ஐ மறுசீரமைப்பு செய்து தந்திடவும், இரண்டாண்டு கால நீட்டிப்பு செய்து கொடுத்திடவும் மத்திய அரசை வலியுறுத்துவோம். கட்டுப்பாடின்றி நூல் மற்றும் துணி வகைகள் இறக்குமதியாவதை கண்காணித்து தடுத்திட மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

vi) Cotton Corporation of India (CCI) மூலம் கொள்முதல் செய்யும் அனைத்து பஞ்சையும் நூற்பாலைகளுக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என வலியுறுத்துவோம்.

vii) மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் விசைத்தறி கூடங்களுக்கு சோலார் பேனல் அமைத்து பசுமை மின் திட்டம் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் செயல்படுத்த வலியுறுத்துவோம்.

viii) விசைத்தறி தொழிலாளர்களுக்கு மத்திய அரசு பங்களிப்புடன் இருந்த இன்சூரன்ஸ் திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ix) கச்சாப் பட்டு விலையை நிர்ணயிக்க உயர்மட்டக் குழு அமைக்க வலியுறுத்துவோம்.

x) மத்திய அரசின் நெசவாளர்கள் குழு காப்பீட்டை மீண்டும் செயல்படுத்த வலியுறுத்துவோம்.

xi) தமிழ் நாட்டில் நெசவு செய்யப்படும் துணிகளை பிரிண்டிங் செய்வதற்கான ஆலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

xii) நூல் விலையினை கட்டுக்குள் கொண்டுவர நூல் வங்கி அமைத்திட வலியுறுத்துவோம்.

xiii) மத்திய அரசு செயல்படுத்தி வரும் நெசவாளர் சேவா மையம் தறி உபகரணங்கள் 90 சதவீத மானியத்துடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டம், அனைத்து நெசவாளர்களுக்கும் 90 சதவீத மானியத்துடன் தறி உபகரணங்கள் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.

xiv) மத்திய அரசின் பட்டு வாரிய அலுவலகத்தினை தமிழ் நாட்டில் அமைத்து, பட்டு உற்பத்தி தரத்தினை மேம்படுத்தியும், பட்டு நூலின் விலையை சீராக வைத்திருக்க வழிவகை செய்ய வலியுறுத்துவோம்.

xv) மத்திய அரசு முன்பு கொண்டு வந்த பவர்டெக்ஸ் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து விசைத் தறிகளுக்கு ஊக்கமளித்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

xvi) கரூரில் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய டையிங் பாயிண்ட் அமைத்திடவும் மற்றும் ஜவுளி ஏற்றுமதிக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய வீவீங் பாயிண்ட் அமைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

xvii) கரூரில் பெரிய அளவிலான ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா (MEGA INTEGRATED TEX PARK) அமைத்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.

**90.** மத்திய அரசு தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு கடந்த பல ஆண்டுகளாக தலைவர் பணியிடம் காலியாக உள்ளது. மேலும், மொத்தப் பணியாளர்களில் தமிழர்கள் 15% மட்டுமே உள்ளனர். எனவே, உடனடியாக முழுமையாக பணி நியமனம் செய்திட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**91.** தென் மாவட்டங்களின் நலன் கருதி மதுரையில் IIT., IIM அமைய வலியுறுத்துவோம்.

**92.** மத்திய அரசு BSNL அலைபேசி தொலைத்தொடர்பு சேவை அனைத்து இடங்களிலும், மலைப் பகுதிகளிலும் தங்குதடையின்றி கிடைத்திட புதிய கோபுரங்கள் அமைத்திடவும் வலியுறுத்துவோம்.

**93.** கோவையில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைய வலியுறுத்துவோம்.

**94.** கோவையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைத்துத் தர மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**95.** மத்திய அரசு, குடும்ப அட்டைக்கு ஆண்டுக்கு **13** சிலிண்டர்கள் மட்டுமே மானியம் மூலமாக விற்பனை செய்கிறது. இதனை ஆண்டுக்கு **16** சிலிண்டராக மானியத்துடன் உயர்த்தி வழங்க ஆயில் நிறுவனங்களின் கேஸ் ஏஜென்சிகளுக்கு ஆணையிட மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**96.** i) காரமடை மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இரண்டு நகரங்களையும் இணைத்து தேசிய நெடுஞ்சாலை (NH181) மூலமாக புறவழிச் சாலையை இணைக்க வலியுறுத்துவோம்.

ii) மேட்டுப்பாளையம் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் பழுதடைந்துள்ளது. எனவே, புதிய மேம்பாலம் தேசிய நெடுஞ்சாலைத் துறை (NH181) மூலமாக அமைக்க வலியுறுத்துவோம்.

**97.** தமிழக இரயில் நிலையங்களில் இரயில் பணிமனைகளில், இரயில் அலுவலகங்களின் உணவுக் கூடப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் தமிழக இளைஞர்களுக்கு பணி நியமனங்களை வழங்கிட வலியுறுத்துவோம்.

**98.** நில எடுப்பு வழக்குகளை விசாரிக்க அனைத்து மாநிலங்களிலும் தனி சிறப்பு நீதிமன்றங்களை மத்திய அரசே அமைத்து அனைத்து உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தின் சிறப்பு அமர்வை ஏற்படுத்தி இன்றியமையாத அவசரத் தேவையாக இருக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை விரைவுபடுத்திட ஏதுவாக வழக்கு, நீதிமன்றத்திற்கு வந்த **30** நாட்களுக்குள் முடிக்க வலியுறுத்தப்படும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் தமிழக கிளைகளில், தமிழை தாய்மொழியாக கொண்டவர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும். கிராமப்புற வங்கிக் கிளைகளில் சம்பந்தப்பட்ட மாநிலத்தவர்களே பணியமர்த்தப்பட வேண்டும் என வலியுறுத்துவோம்.

**99.** i) செங்கல், M-Sand மற்றும் P-Sand, ஜல்லி விலையேற்றம் பல மடங்கு கடுமையாக உயர்ந்திருப்பதால், நடுத்தர மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இப்பொருட்கள் உற்பத்தி விற்பனைக்கு பல இடையூறுகள் உள்ளதால் அவற்றைக் களைந்து நியாயமான விலையில் இவை அனைத்தும் பொதுமக்களுக்கு கிடைத்திட உரிய வழிமுறைகள் வகுக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ii) ஏழை, எளிய, நடுத்தர மக்கள் வீடு கட்டும் திட்டத்தின் செலவீனங்களை கட்டுக்குள் கொண்டுவரவும், செங்கல் உற்பத்தித் தொழிலை காப்பற்றிடவும், தற்போதுள்ள GST விற்பனை வரியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

**100.** இந்தியாவின் மிக முக்கிய தொழில் நகரமான கோவையில் மத்திய அரசின் NIT கல்வி நிறுவனத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

**101.** உற்பத்தியாளர்களின் நலன் கருதி, வங்காளதேச நாட்டுடன் செய்துள்ள Free Trade Agreement–ஐ மறுபரிசீலனை செய்ய வேண்டும் அல்லது அங்கிருந்து இறக்குமதியாகும் பொருட்கள் சீனா மற்றும் பிற நாட்டின் பின்புலத்தினால் இறக்குமதி ஆவதை கண்காணித்து தடுக்க வலியுறுத்துவோம்.

**102.** i) நெய்வேலி NLC நிலக்கரி நிறுவனத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு இன்றைய சந்தை மதிப்பிற்கு ஏற்ற வகையில் நிலத்திற்கு உரிய தொகையை மத்திய அரசின் நில எடுப்பு சட்டத்தின்படி வழங்கிடவும், தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பும், உரிய நிவாரணம் வழங்கிடவும், வேலைவாய்ப்பில் அங்கு வேலை செய்துவந்த கூலி விவசாயத் தொழிலாளர்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் முன்னுரிமை வழங்கிடவும் வலியுறுத்துவோம்.

ii) மக்கள் விருப்பத்திற்கு மாறாக நெய்வேலி NLC நிலக்கரி நிறுவனத்தில் இனிமேல் புதிய அணுமின் உற்பத்தி, சுரங்கப் பணிகள் தொடரக் கூடாது என்பது வலியுறுத்தப்படும். மேலும், நிலக்கரி நிறுவனம் **2** சதவீதம் மட்டுமே கடலூர் மாவட்டத்திற்கு சமூக பொறுப்பு நிதி (CSR) வழங்கி வருகிறது. மாறாக **5** சதவீத சமூக பொறுப்பு நிதி கடலூர் மாவட்டத்திற்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துவோம்.

**103.** கிராமப்புற அஞ்சலகங்களை, கிராமப்புற அஞ்சல் வங்கிகளாக தரம் உயர்த்தவும் மற்றும் அஞ்சல் துறை ஊழியர்களுக்கு மத்திய அரசு (பென்ஷன்) ஓய்வூதியம் வழங்கவும் வலியுறுத்துவோம்.

**104.** புதுச்சேரி மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக இந்திய தொழில்நுட்ப மையம் (IIT), IT Park, விமான நிலையம் விரிவாக்கம் ஆகியவற்றை நிறைவேற்றிட வலியுறுத்துவோம்.

**105.** வருமான வரிச் சட்டம் பிரிவு **43–**பி மத்திய அரசால் முக்கிய திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இது சிறு, குறு தொழிலாளர்களின் நலனை பாதிக்கும் வகையில் உள்ளதால் இச்சட்டம் அமல்படுத்தக்கூடாது என வலியுறுத்துவோம்.

**106.** சென்னை–பெங்களூர் எக்ஸ்பிரஸ் ஹைவே (தேசிய நெடுஞ்சாலை) பணிகள் விரைந்து முடிக்க கூடுதல் நிதி உதவி வழங்க மத்திய அரசிடம் வலியுறுத்துவோம். தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள வாகன நிறுத்துமிடங்களில் ஓட்டுநர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வலியுறுத்துவோம். மேலும், LGP டேங்க் லாரிகளுக்கு பாதுகாப்பான நிறுத்துமிடங்கள் அமைய வலியுறுத்துவோம்.

**107.** நாகப்பட்டினம் பனங்குடியில் மத்திய அரசு **36,000/–** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெட்ரோ கெமிக்கல் துணைத் தொழில்கள் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வலியுறுத்துவோம்.

**108.** நாகப்பட்டினத்திலிருந்து சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாடுகளுக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டது. தற்போது, நாகப்பட்டினம் முதல் இலங்கை காங்கேசன் துறைமுகம் வரை கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டு இயங்காமல் உள்ளது. இத்தடங்களில் பயணிகள் போக்குவரத்தையும் சரக்கு போக்குவரத்தையும் தொடர்ந்திட வலியுறுத்துவோம்.

**109.** தூத்துக்குடி துறைமுகம் மூலம் சரக்கு பெட்டகங்களை நேரடியாக அனுப்புவதற்கு ஏற்ற வகையில் “ஹப் போர்ட்’’ அமைக்க வலியுறுத்துவோம். தூத்துக்குடியில் வர்த்தக மையம் (Trade Center) மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைய வலியுறுத்துவோம்.

**110.** செயல்படாமல் இருக்கும் கன்னியாகுமரி மாவட்டம், பரளியார் ரப்பர் ஆராய்ச்சி நிலையத்தை பேச்சிப்பாறை அல்லது மணலோடை பகுதியில் விரிவாக்கத்துடன் அமைத்துத் தர வலியுறுத்தப்படும்.

111. ரப்பர் இறக்குமதியை கட்டுப்படுத்தி ரப்பருக்கு உரிய விலை கிடைக்கவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் பூங்கா மற்றும் ரப்பர் தொழிற்சாலை அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

112. கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆசாரிப்பள்ளத்தில் ரூ. 65 கோடி மதிப்பீட்டில் கூட்டு கேன்சர் மையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வலியுறுத்துவோம்.

113. i) இராணுவப் படைவீரர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் அனைத்தும் துணை இராணுவப் படையினருக்கும் கிடைக்கவும், ஓய்வு பெற்ற துணை இராணுவ வீரர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமையும், இடஒதுக்கீடும் கிடைத்திட வலியுறுத்துவோம்.

ii) போரில் இறக்கும் வீரர்களின் குடும்பத் தலைவிகளுக்கும், வாரிசுகளுக்கும் தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கிட வலியுறுத்துவோம்.

114. திருச்சியில் தேசிய இராணுவக் கல்லூரி (National Defence College) ஒன்று அமைக்க வலியுறுத்துவோம்.

115. தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய கனரக தொழிற்சாலைகள் அமைய வலியுறுத்தப்படும்.

116. பத்திரிகையாளர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்ற வலியுறுத்துவோம். மேலும், அனைத்து சுங்கச் சாவடிகளிலும் பத்திரிகையாளர்கள் கட்டணமின்றி பயணம் மேற்கொள்ள வலியுறுத்துவோம்.

117. சேலத்தில் செயற்கை வைர மூலப் பொருட்கள் தயார் செய்ய தொழில் நிறுவனங்கள் அமைத்திட வலியுறுத்தப்படும். மேலும், செயற்கை வைர கற்களை ஏற்றுமதி செய்திட இலகுவான வழிவகை செய்திடவும் வலியுறுத்தப்படும்.

118. BHEL, NLC, ONGC, COAL INDIA & SAIL போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல இலட்சம் தொழிலாளர்கள் சார்ந்து வாழ்கிறார்கள். எனவே, பொதுத் துறையின் பங்குகளை தனியாரிடம் விற்பதை தடுத்திட தேவையான நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்தப்படும்.

**119.** வணிகர்களுக்கு சுலப தவணையில் வங்கிக் கடன் குறைந்த வட்டியில் கிடைத்திட வலியுறுத்தப்படும்.

**120.** தமிழ் நாட்டில் இருந்து வெளி மாநிலங்கள் சென்று வரும் அனைத்து வாகனங்கள், கனரக வாகனங்கள் விபத்துக்குள்ளானாலோ, ஏதேனும் வழக்குகளில் சிக்கி இருந்தாலோ இந்த வழக்குகளை மூன்று மாத காலங்களில் முடித்துக் கொடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும். கனரக வாகன ஓட்டுனர்களுக்கும், உதவியாளர்களுக்கும் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்படும்.

**121.** தேசிய நெடுஞ்சாலையில் மத்திய அரசே நிதி தந்து சிறப்பு விபத்து சிகிச்சை மருத்துவமனைகள் அமைத்திட வலியுறுத்தப்படும்.

**122.** பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 40 ஆண்டுகள் வரை பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு EPF ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் ரூ. 3,000/– வரையிலான ஓய்வூதியத்தை பத்தாண்டுகளுக்கும் மேலாக எவ்வித உயர்வுமின்றி பெற்று வருகிறார்கள். எனவே, இவ்வகை EPF ஓய்வூதியர்களுக்கு பஞ்சப்படியுடன் கூடிய தற்கால வாழ்வியலுக்கு ஏற்ற ஓய்வூதியம் வழங்க வலியுறுத்தப்படும்.

**123.** GNT சாலையில் மாதவரம் மேம்பாலம் முதல் சோழவரம் சுங்கச் சாவடி வரை உயர்மட்ட மேம்பாலச் சாலை (Expressway) அமைக்க வலியுறுத்தப்படும்.

**124.** செங்கல்பட்டில் இருந்து கிண்டி கத்திப்பாரா வழியாக பாரிமுனை வரை பறக்கும் உயர்மட்டச் சாலை (Expressway) அமைக்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**125.** தொலைக்காட்சிகளில் நடைமுறையில் இருந்து வரும் செட்டாப் பாக்ஸ் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஒரு நிறுவனத்தில் இருந்து மற்றொரு நிறுவனத்திற்கு மாறும் டி.டி.எச். ஃபோர்ட்டபிலிட்டி (DTH Portability) சட்டத்தை நிறைவேற்றி மக்கள் பயனடைய மத்திய அரசை வலியுறுத்தப்படும்.

126. சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க, உரிய நிதியுதவி வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

127. இஸ்லாமியர்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கும், கிறிஸ்தவர்கள் ஜெருசலம் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கும், யாத்ரீகர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதோடு, மானியத்தை உயர்த்தி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

128. மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

129. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் மேம்பட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் வளர்ச்சி வங்கி என்ற முழு கடனுதவி தரும் சிறப்பு வங்கியை ஏற்படுத்தித் தர மத்திய அரசை வலியுறுத்தப்படும்.

130. எக்காலத்திலும் எந்நாட்டவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகப் பொது மறையாம் திருக்குறளை தேசிய நூலக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

131. **புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து :**

புதுச்சேரி யூனியன் பிரதேசம் மக்கள் தொகையிலும் அதிகமாக உள்ள நிலையில், புதுச்சேரி மக்களுக்குத் தேவையான அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றிடும் வண்ணம், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற்றுத் தருவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வலியுறுத்துவோம்.

132. **இடஒதுக்கீடு :**

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான **33** சதவீத இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்திட வேண்டும் என்பதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதிபட நிற்கும்.

133. குடியுரிமை திருத்தச் சட்டமானது, இந்தியா என்கிற பன்முக தேசத்தில் வாழும் மக்களை மதங்களாகப் பிரிக்கின்ற வகையில் அதன் விதிகள் அமைந்துள்ளன. இந்தியா மதச் சார்பற்ற நாடு. குடியுரிமை தொடர்பான

அரசின் நடவடிக்கை பாரபட்சம் இல்லாமல் அனைத்து மதங்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.

ஆனால், தற்போது அமல்படுத்தப்பட்டிருக்கும் சட்டமானது மத அடிப்படையிலும், மொழி அடிப்படையிலும் பாரபட்சமாக உள்ள காரணத்தால், முஸ்லிம்களையும், ஈழத் தமிழர்களையும் இந்தச் சட்டத்தில் உட்படுத்த வேண்டும்.

நம் முன்னோர்கள் கட்டமைத்த பன்முகத் தன்மை கொண்ட தேசத்தை நிலைநிறுத்த வேண்டும்.

அந்த வகையில், குடியுரிமை திருத்தச் சட்டத்தில் முஸ்லிம்களையும், ஈழத் தமிழர்களையும் உட்படுத்த, நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.

## நிறைவுரை

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கம். லட்சோப லட்சம் தொண்டர்களின் உழைப்பாலும், உணர்வுகளாலும் கட்டி எழுப்பப்பட்ட இயக்கம். நமது ஆசான், நம்மை உருவாக்கிய மகத்தான, மனிதநேயம் மிக்கத் தலைவர் புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.** அவர்களால் மக்கள் தொண்டு ஆற்றுவதற்காகவே உருவாக்கப்பட்ட இயக்கம்.

சதிகளையும், சூழ்ச்சிகளையும் முறியடித்து, புரட்சித் தலைவர் கண்ட இயக்கத்தை அவரது காலத்திற்குப் பின், இந்த இயக்கத்தை அழிக்க பல சக்திகள் முயன்றன. அவற்றையெல்லாம் முறியடித்து புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்து வலுவாக்கி ஒரு தன்னிகரில்லாத இயக்கமாக வழிநடத்தினார்கள். ஒரு தாயாக கோடிக்கணக்கான தொண்டர்களுக்கு மக்கள் பணியாற்றுவதற்கான மாண்புகளை தாயன்போடு கற்றுத் தந்தவர். அவர் வழி வந்த கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் 'புரட்சித் தமிழர்' **திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்** 2 கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களை,

வழிநடத்துகின்ற பெருந்தகையாக செயல்பட்டு வருகின்றார். அவரது வெற்றிப் பயணத்தில் 2024, நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை சந்திக்கின்றோம்.

அந்த வகையில், இந்தத் தேர்தல் அறிக்கையில் தமிழ் நாட்டிற்கு, தமிழக மக்களுக்கு என்னவெல்லாம் செய்யப்படும் என்பதையும், தேசிய அளவில் நாட்டு மக்களுக்காக எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்திய நாட்டைக் காப்பாற்ற '**அமைதி, வளம், வளர்ச்சி**' என்ற நோக்கத்துடன் இந்தியாவை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல, ஆற்றல் மிக்க, துணிச்சல் மிக்க, திறமையான, மதிநுட்பம் வாய்ந்த, மனிதநேயம் கொண்டவராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்தார்கள்.

புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.**, புரட்சித் தலைவி **அம்மா** ஆகியோர் வகுத்துத் தந்த வழியில் "**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்**" தனது பயணத்தை மேற்கொள்கிறது.

**'தமிழர் உரிமை மீட்போம், தமிழ் நாடு காப்போம்.'**

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களியுங்கள்.**

**எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்! உங்கள் சின்னம்**



**"இரட்டை இலை"**